இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 80 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 12 – ஞாயிற்றுக்கிழமை 29 அக்டோபர் 2023 – மதுரை 8 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 80 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 12 - Sunday 29 October 2023 - Madurai 8+8 Pages ₹ 5.00

## கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்!

# மாலத்தீவிலிருந்து மீனவர்களை உடனே மீட்டெடுத்திடுக!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தன்னை சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1500 புத்தகங்களை தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நன்கொடையாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் ஆர்.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக். 29 - மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள் மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் 23.10.2023 அன்று கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களை விரைவில் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.10.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீன் இறங்குதளத்திலிருந்து, 1.10.2023 அன்று, INDTN12 MM6376 பதிவு எண் கொண்ட விசைப்படகில் மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள், 23.10.2023 அன்று தினாது தீவு அருகே மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம், மாலத்தீவு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்டுள்ள 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

## மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.வுக்கு கடும் எதிர்ப்பு!

# பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் திடீர் ரத்து!

*ஐஸ்வால், அக். 29 - மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க.,வுக்கு பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு நிலவுவதால் பிரதமர் மோடியின் தேர்தல் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.*

*மக்கள் விரோத செயல்பாடுகள் காரணமாக ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு நிலவி வருகிறது. இது, ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலிக்கும் என அரசியல் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. கருத்துக்கணிப்பு முடிவுகளும் பா.ஜ.க.,வுக்கு எதிராகவே அமைந்துள்ளன.*

*இந்நிலையில், மிசோரம் மாநிலத்தில் பா.ஜ.க., மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மிசோரமில் மிசோ தேசிய முன்னணி கட்சி பா.ஜ.க.,வுன் இணைந்து கூட்டணி ஆட்சி நடத்தி வருகிறது. கூட்டணி ஆட்சியில் மாநிலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் இரு கட்சிகள் மீதும் கடும் அதிருப்தி நிலவுகிறது. கூட்டணியிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. பா.ஜ.க.,வின் பிரச்சாரத்தில் கலந்து கொள்ள போவதில்லை என கூட்டணி கட்சிகள் அறிவித்துள்ளன.*

*இதன் காரணமாக தனது மிசோரம் தேர்தல் பிரச்சாரத்தை பிரதமர் மோடி ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மிசோரம் மாநிலத்தில் அடுத்த மாதம் 7 ஆம் தேதி சட்டபேரவை தேர்தல் நடைபெறுகிறது. அங்கு வரும் 30 ஆம் தேதி பிரதமர் பிரச்சாரத்துக்கு செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

## ‘வந்தே பாரத்’ ரயில்களை தயாரிக்க பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒப்பந்தம்!

# ரூ.10 ஆயிரம் கோடி மெகா முறைகேடு!

## ஐ.சி.எப். ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, அக்.29 – வந்தே பாரத் ரயில்களை தயாரிக்க பன்னாட்டு தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதிய படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயிலை உருவாக்க பன்னாட்டு நிறுவனத்துடன் ரயில்வே அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கு ஐ.சி.எஃப் ஊழியர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது வரை வந்தே பாரத் ரயிலை தாங்கள் தயாரித்த நிலையில், தற்போது தனியாருக்கு ஒப்பந்தம் அளித்துள்ளதாகவும், ரயில் பெட்டி தயாரிப்புக்கு ஐ.சி. எஃப்., நிறுவனம் முழுவதையும் அவர்கள் பயன்படுத்தி கொள்ளவுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

ரயில் தயாரிப்புக்கு தேவையான பொருட்கள், இடம் உள்ளிட்ட அனைத்தையும் நம்மிடமே பெற்று கொண்டு, எந்த முதலீடும் இல்லாமல் லாபம் சம்பாதிக்க உள்ளதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஒன்றிய அரசை கண்டித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.சி.எஃப்., ஊழியர்களால் 70 கோடி ரூபாயில் வந்தே பாரத் ரயில் தயாரிக்கப்படும் நிலையில், பன்னாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஒரு ரயிலுக்கு 120 கோடி ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், 200 ரயில்களை தயாரிக்க ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மெகா ஊழல் மற்றும் முறைகேடு அரங்கேறியுள்ளதாகவும் குற்றம் சாட்டு எழுந்துள்ளது.

பன்னாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை உடனே ரத்து செய்ய வேண்டும் என்றும், ஐ.சி.எஃப்., ஊழியர்களால் மட்டுமே வந்தே பாரத் ரயிலை தயாரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

## தமிழ்நாட்டிலுள்ள

# சிறை நூலகங்களுக்குப் புத்தகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்கொடையாக வழங்கினார்!

**சென்னை, அக். 29 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1500 புத்தகங்களை நேற்று (28.10.2023) தலைமைச் செயலகத்தில் சிறைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 2018ஆம் ஆண்டு பொறுப்பேற்றது முதல், தன்னை சந்திக்க வருபவர்கள் பூங்கொத்து, பொன்னாடைகளை தவிர்த்து, அறிவியக்கம் உருவாக்க புத்தகங்களை வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். அதனையொட்டி, இது வரை தனக்கு அளிக்கப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் புத்தகங்களை தமிழ்நாடு மற்றும் அயலகத்தில் வாழும் தமிழர்களின் வேண்டுகோளை ஏற்று, அவர்களின் நூலகங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைவாசிகளிடையே புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும், அவர்களின் மன அழுத்தத்தை போக்குவதற்காகவும், அவர்களின் மனதில் நற்சிந்தனைகளை விதைக்கும் விதமாக, மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சிறையில் உள்ள பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் சிறை நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகங்களில், பல வகையான புத்தகங்கள், பல்வேறு வகையான செய்தித்தாள்கள், வார/மாத இதழ்கள் வைக்கப்பட்டுள்ளன.


**லட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள்**

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் முதன்முறையாக சிறைத்துறை பங்கேற்று, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் சிறை நூலகங்களுக்கு நன்கொடையாக பெற்றுள்ளது. மேலும், அனைத்து சிறைகளிலும் உள்ள சிறை நூலகங்களை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு 2023-2024ஆம் ஆண்டில் 2 கோடியே 8 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

**1500 புத்தகங்கள் வழங்கினார்!**

மேற்படி சிறை நூலகங்களில், புத்தகங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் விதமாகவும், சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு இப்புத்தகங்கள் பேருதவியாக அமையும் என்பதை கருத்தில் கொண்டும், முதலமைச்சர் அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட 1500 புத்தகங்களை சிறை நூலகங்களுக்கு நேற்று நன்கொடையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத் தலைவர் ஆர்.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான பரிவர்த்தனை அட்டைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ்6, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாநகராட்சி மற்றும் ஊராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்வதற்காக தூய்மைப்பணி வாகனங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ்6, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டரினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ்6, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில், சாதிய நச்சால் ஏற்பட்ட தாக்குதலில் பாதிப்புக்குள்ளான பள்ளி சிறுவன் மற்றும் சிறுமி தொடர் சிகிச்சையின் பயனாக குணமடைந்துள்ளனர். அந்தச் சிறார்களையும் அவர்களது குடும்பத்தாரையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நெல்லையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு சிறப்பாக மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர்களை பாராட்டினார். மேலும், அந்த சிறாரின் குடும்பத்தாருக்கு, அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வீடு வழங்குவதற்கான ஒதுக்கீட்டு ஆணையை அளித்தார். அச்சிறாரை நெல்லையில் உள்ள பள்ளியில் சேர்ப்பதற்கான மாறுதல் ஆணையையும், அவர்களின் தாயாருக்கு நெல்லையில் உள்ள சத்துணவு மையத்தில் பணிபுரிவதற்கான பணி மாறுதல் ஆணையையும் வழங்கினார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் என அமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கான நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.






சேலத்தில் வரும் டிசம்பர் 17 அன்று நடைபெறவுள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டுக்கான பணிகளை ஒருங்கிணைக்கச் செய்யும் வகையில் திருநெல்வேலி கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச்செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

மூன்று வியத்தகு சாதனைகளும்

# ஊக்கமளிக்கும் ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக். 29-

“மூன்று வியத்தகு சாதனைகளும் ஊக்கமளிக்கும் ஒளி விளக்குகளாகத் திகழ்கின்றன” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

தனிச்சிறப்பான மூன்று விளையாட்டு வீரர்கள்! உத்வேகம் அளிக்கும் மூன்று தங்கக் கதைகள்!

ஜம்மு - காஷ்மீரைச் சேர்ந்த இளம் வீராங்கனை ஷீத்தல் தேவி பாரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார். பதினாறு வயதே ஆன வில்வித்தை வீராங்கனையான ஷீத்தல் ஏற்கனவே பெண்களுக்கான தனிநபர் காம்பவுண்ட் பிரிவிலும் கலப்பு காம்பவுண்ட் பிரிவிலும் தங்கம் மற்றும் பெண்கள் இரட்டையர் பிரிவில் வெள்ளி என மூன்று பதக்கங்களை வென்று ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளார்.

நமது தமிழ்நாட்டின் பெருமை தர்மராஜ் சோலைராஜ் அவர்களோ ஆண்கள் நீளம் தாண்டுதல் T64 பிரிவில் 6.80 மீட்டர் தாண்டி புதிய ஆசிய சாதனையையும், பாரா விளையாட்டு சாதனையையும் படைத்துள்ளார்.

மகளிர் பாட்மிண்டனில் SU5 பிரிவில் தங்கம் வென்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசிமதி அவர்களும் நம் பாராட்டுக்குரியவராகிறார். இந்த மூன்று வியத்தகு சாதனைகளும் நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கும் ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



திருவண்ணாமலையில் தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்யக் கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். உடன் மாநிலச் செயலாளர் கு.கருணாநிதி, டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரிய விஜயரங்கன், பார்வதிசீனுவாசன் சி.ராம்காந்த் உட்பட பலர் உள்ளனர்.


தலைவர் பதவியை ஓராண்டு நிறைவு செய்த

# கார்கேவுக்கு காங்கிரஸ் பாராட்டு!

## ‘தொலைநோக்குப் பார்வை கொண்டவர்’ என கருத்து!

புதுடெல்லி, அக். 29-

காங்கிரஸ் தலைவர் பதவியில் மல்லிகார்ஜுன கார்கே ஓராண்டை நிறைவு செய்தார். அவரது தலைமையில் கட்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருப்பதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.



ஓராண்டு நிறைவு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடந்தது. மல்லிகார்ஜுன கார்கேவும், சசிதரூர் எம்.பி.யும் போட்டியிட்டனர். இதில் கார்கே அமோக வெற்றி பெற்றார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 26-ந் தேதி, காங்கிரஸ் தலைவர் பொறுப்பை முறைப்படி ஏற்றுக் கொண்டார். அவர் பதவி ஏற்று ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

இதையொட்டி, காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ ‘எக்ஸ்’ பக்கத்தில் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களுக்கு நன்மை செய்ய உறுதி எடுத்துக் கொண்டவர். ஜனநாயகம், சமூக நீதி, மதச்சார்பின்மை, உள்ளடக்கிய வளர்ச்சி, தேச பக்தி ஆகிய காங்கிரசின் பண்புகள் அமையப் பெற்றவர்.

வேட்கையும், விடாமுயற்சியும் இருந்தால் சாதிக்க முடியும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம்.

### 55 ஆண்டுகள் கால வெற்றி

வட்டார தலைவர் என்ற எளிய பதவியில் இருந்து கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக உயர்ந்துள்ளார். 55 ஆண்டு கால தேர்தல் வெற்றிக்கு சொந்தக்காரர். இது, அவரது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை காட்டுகிறது.

தான் நம்பும் கொள்கைகளுக்காக போராடுபவர். அவருக்கு அச்சமே கிடையாது. ஏழைகள் மற்றும் நலிந்தோரின் உரிமைகளுக்காக பாடுபடுபவர். அவரது தலைமையில் கட்சி கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது. கட்சி கட்டமைப்புக்கு புத்துயிரூட்டியதில் முக்கியப்பங்கு வகித்தார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ரூ.85.56 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும்

# நெல்லை சந்திப்பு, பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்புப் பணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

நெல்லை, அக்.29-

திருநெல்வேலி சந்திப்பு அருகே உள்ள பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி மற்றும் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கம், கீழநத்தம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் குளம் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (27.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, சட்டமன்ற தொகுதிக்கு ஒரு நூலகம் அமைத்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்கான நூலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கேலரி தடகள ஓடுதளம் உள்ளிட்ட வசதிகளை பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிக்க வேண்டுமென விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கீழநத்தம் பகுதியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவிற்குட்பட்ட 50மீ பந்தய நீச்சல் குளம் பார்வையிடப்பட்டது. 50மீ பந்தய நீச்சல் குளத்திற்கு சீரமைப்பு பணிகள் மற்றும் வர்ணம் அடிக்கும் பணிகளுக்கு ரூபாய் 10.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், சீரமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சீரமைக்கும் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நவம்பர் 2023 முதல் வாரத்தில் வரும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த பேருந்து நிலையமானது 4.27 ஏக்கர் பரப்பளவில் 4 வது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.85.56 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாட்டிற்கும், தரைத்தளத்தில் காத்திருப்போர் கூடம், உணவகம், காவல் அறை, மருத்துவ மையம், சி.சி.டி.வி அலுவலகமும், கீழ்த்தளத்தில் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. 94 சதவீதம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நவம்பர் 2023 இறுதியில் முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வின் போது, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி நல்லூர் வடக்கு ஒன்றியம் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் உரையாற்றினார். உடன் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் இள.புகழேந்தி, நல்லூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பாவாடை கோவிந்தசாமி மாவட்டப் பொருளாளர் க.தண்டபாணி, நல்லூர் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் பால் கருப்பையா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் த.அண்ணாதுரை, மாரிமுத்தாள், குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தங்க.நாராயணசாமி, மாவட்டக் கவுன்சிலர் சக்தி விநாயகம், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் தனசேகரன், தொண்டர் அணி துணை அமைப்பாளர் கே.ரகுநாதன் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்

# ‘நீட்’ எதிர்ப்புக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறார்!

## திருவண்ணாமலையில் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலையில், அக்.29-

திருவண்ணாமலையில் தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் நீட் தேர்வு ரத்து செய்ய கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து இயக்கத்தை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நீட் தேர்வை ரத்து செய்ய கோரி திமுக இளைஞர் அணி, மருத்துவ அணி, மாணவர் அணி மற்றும் பொறியாளர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது. அதனை தொடர்ந்து 27.10.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில், திமுக பொறியாளர் அணி சார்பில், திருவண்ணாமலை, அருணை பொறியியல் கல்லூரியில் நீட் தேர்வு ரத்து செய்ய கோரி 10 லட்சம் மாணவர்களிடம் டிஜிட்டல் கையெழுத்து பெறும் நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநில பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி தலைமை வகித்தார். மாவட்டப் பொறியாளர் அணி நிர்வாகிகள் அ.மோகன்ராஜ், ச.பிரகாஷ், டி.என்.பி.வினோத்குமார், த.ரகுபதி, தா.சண்முகம், து.மணியரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் சி.ராம்காந்த் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதல் டிஜிட்டல் கையெழுத்திட்டு, பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் கையெழுத்து இயத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

சமூக நீதிக்கு எதிரான எந்த செயல்களையும் தி.மு.க. எப்போதும் எதிர்க்கும். நீதிக்கட்சி கால தொடங்கி இன்றைக்கு வரை தமிழ்நாடு சமூக நீதியை பாதுகாக்கும் மாநிலமாக இருக்கிறது. அதனால்தான், பிற மாநிலங்களைவிட தமிழ்நாடு வேறுபட்டு நிற்கிறது. உலகில் முதன்முதலாக நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் நீதிகட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

அதேபோல், இடஒதுக்கீடு வழங்குவதிலும் தமிழ்நாடு தான் முன்னோடி வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது, ஒன்றிய அரசு பணிகளில் 27 சதவீத இடஒதுக்கீட்டை கலைஞர் பெற்றுத்தந்தார். பிற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது நீட் கொண்டுவரப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டுக்கு நீட் ஒத்துவராது என கலைஞர் எதிர்த்தார். அதனால், நீட் தேர்வை ஏற்காத மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என சட்டம் இயற்றப்பட்டது.

### எடப்பாடி ஆட்சியில் தான் ‘நீட்’ நுழைந்தது!

அதைத்தொடர்ந்து, பா.ஜ.க. அரசு வந்தபோதும் நீட் கொண்டுவரப்பட்டது. நீதிமன்றத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கு தடை ஆணை பெற்றார் கலைஞர் பின்னர், ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்திலும் கலைஞரை பின்பற்றி தமிழ்நாட்டில் நீட் வர அனுமதிக்கவில்லை. அவரது மறைவுக்கு பிறகு முதல்வரான எடப்பாடி பழனிசாமி ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் நீட் நுழைந்தது. அவர் தடுத்திருந்தால் வந்திருக்காது.

சமஸ்கிருதம் படித்திருந்தால் தான் மருத்துவம் சேர முடியும் என்ற நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றினோம். இப்போது, நம் உரிமையை பறிப்பதற்காக நீட் கொண்டுவந்துள்ளனர். பிளஸ்2 வரை படித்து பெறும் மதிப்பெண்களை விட 3 மாத தனியார் பயிற்சி மையங்களில் படித்து பெறுகிற நீட் மதிப்பெண்தான் தகுதியானது என்பதை எப்படி ஏற்க முடியும்?

பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் நீட் எதிர்ப்புக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறார். சட்டமன்றத்தில் நீட்டுக்கு எதிராக ஏகமனதாக இயற்றிய தீர்மானத்தை கிடப்பில் போட்ட ஆளுநர், தனக்கு அதிகாரம் இருந்தால் அந்த தீர்மானத்தை ரத்து செய்துவிடுவேன் என பகிரங்கமாக பேசினார்.

### இன்னும் எத்தனை உயிர்களை இழப்பது?

குஜராத் முதல்வராக இருந்தபோது, அந்த மாநிலத்துக்குள் நீட் நுழைய விடமாட்டேன் என பேசிய மோடி, பிரதமரான தும் எல்லா மாநிலமும் நீட் நடத்த வேண்டும் என வலியுறுத்துகிறார். நீட் தேர்வினால் சமூகம்பாழ்பட்டு கிடக்கிறது. மாவட்டத்தில் முதலிடம் பெற்ற அனிதாவால் கூட மருத்துவ படிப்பில் சேர முடியவில்லை. இன்னும் எத்தனை உயிர்களை இழப்பது.

நீட்டுக்கு எதிரான தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கு உள்ளது. எனவே அந்த ஒப்புதலை பெறுவதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்காக, அமைச்சர் உதயநிதிஸ்டாலின் எடுத்த முயற்சியின் காரணமாக கையெழுத்து இயக்கம் நடத்தப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியாவிஜயரங்கன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பார்வதி சீனுவாசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, கு.கணேஷ், பச்சையம்மன் முத்து, பால முரளிகிருஷ்ணா, பிரவீன் ஸ்ரீதரன், துரைவெங்கட் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் மு.தினேஷ்பாபு நன்றியுரை கூறினார்.

ரூ.20 கோடி கேட்டு மர்ம நபர்

# ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு கொலை மிரட்டல்!

## மும்பை போலீஸ் விசாரணை!

மும்மை, அக். 29 -

ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு வந்துள்ள கொலை மிரட்டல் குறித்து மும்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாட்டின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு நேற்று முன்தினம் மர்ம நபர் ஒருவர் மிரட்டல் விடுத்து மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதில் தனக்கு 20 கோடி ரூபாயை முகேஷ் அம்பானி தர வேண்டுமென்றும், இல்லையெனில் அவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்படுவார் என்றும் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுகுறித்த புகாரின் பேரில் இந்திய தண்டனையியல் சட்டத்தின் 387 மற்றும் 506 ஆகிய பிரிவுகளின் கீழ் மும்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க. சுப்பு

### அக்டோபர் 29 (2011)



கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.

மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.

சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.

கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.

“பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், தூத்துக்குடி மாநகராட்சி சார்பில், நேற்று (28.10.2023) மாநகராட்சிக்குட்பட்ட கிரேட் காட்டன், அசோக் நகர், லையன்ஸ் டவுன் புல்தோட்டம் மற்றும் நந்தகோபாலபுரம் ஆகிய 4 இடங்களில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பி.கீதா ஜீவன் தலைமையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, மாநகராட்சி மேயர் பெ.ஜெகன் ஆகியோர் முன்னிலையில், விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மாநகராட்சி துணை மேயர் செ.ஜெனிட்டா, கிழக்கு மண்டலத் தலைவர் கலைச்செல்வி, மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ்குமார், ரிக்டா, மாநகரப் பொறியாளர் பாஸ்கர், துணை மாநகரப் பொறியாளர் சரவணன், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பலர் கலந்து கொண்டனர்.




உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, , திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ்,கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர்நா.சரவணன் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மாவட்டம் கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலாத்தூர் ஆர்.ஆர். மஹாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி வளையல் உள்ளிட்ட சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, பகுதி செயலாளர் சசிகுமார் யூனியன் சேர்மன் வீரராகவன் மற்றும் அரசு அதிகாரிகளின் பயனாளிகள் உள்ளனர்.

### நாளை (30ம் தேதி) பசும்பொன் வருகை தரும்

# முதல்வருக்கு சிவகங்கை மாவட்டம் - திருப்புவனத்தில் வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 29-

நாளை (30ஆம் தேதி) பசும்பொன் தேவர் நினைவிடத்திற்கு மரியாதை செலுத்த வருகை தரும் முதல்வருக்கு சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்புவனத்தில் வரவேற்பு தரப்படுகிறது.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சரு மான கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (30ஆம் தேதி) ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை விழாவில் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகிறார். இதற்காக கார் மூலம் காலையில் மதுரையில் இருந்து பசும்பொன் செல்லும் வழியில் முதல்வருக்கு சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்சார அலுவலகம் எதிரில்காலை 8.00மணிக்கு எனது தலைமையில் (கே.ஆர். பெரிய கருப்பன்) சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது. எனவே இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு முதல்வரை வரவேற்க வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### காளையார் கோவிலில் மாமன்னர்

# மருதுபாண்டியர்கள் 222வது ஆண்டு நினைவு நாள்!

## பொன். முத்துராமலிங்கம் – பவானி ராஜேந்திரன் மரியாதை!

சிவகங்கை, அக். 29 -

சிவகங்கையை ஆட்சி புரிந்த மாமன்னர் மருது பாண்டியர்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்களை முதலில் எதிர்த்துப் போராடியதற்காக தூக்கிடப்பட்டார்கள். அவர்களது தலைமட்டும் 221ஆண்டுகளுக்கு முன்பாக அக்டோபர் 27ஆம் தேதி காளையார் கோவிலில் சொர்ணகளீஸ் வரர் ஆலயம் முன்பாக அவர்களது வேண்டுகோளின்படி அடக்கம் செய்யப்பட்டது. அவர்களது வீரமிக்க செயலினை பாராட் டும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது நினைவிடத்தில் பல்வேறு அரசியல் கட்சியினர் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவு நாளில் மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இந்த ஆண்டு 222 வது நினைவு நாள் நேற்றுமுன்தினம் 27ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது. காலையில் மதுரை ஆதீனம் யாகங்கள் சிறப்பு பூஜைகளை நடத்தி வைத்தார். தொடர்ந்து மருது பாண்டியர் மக்கள் நலகூட்டமைப்பின் சார்பில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக மருது பாண்டியர் நினைவிடத்திற்கு வந்தார்கள். அதை தொடர்ந்து பாலாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நினைவிடத்தில் பல்வேறு அரசியல் கட்சியினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், திருமதி பவானி ராஜேந்திரன் முன்னாள் எம்.பி. ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஷ்ண குமார் வே.ஆரோக்கிய சாமி, எம்.ஜெயராமன் சிவகங்கை நகர் கழக செயலாளர்துரைஆனந்த், நிர்வாகிகள் அயூப்கான் வீனஸ்ராமநாதன், காந்தி கார்த்திகேயன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், ராஜேஸ்வரி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, இளைஞரணி அரிகரன், மாணவரணிரமேஸ், இளைஞரணி சரவணன் துரைகண்ணன், குண்டுமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சிம்மத்தில் போஸ்,முனியசாமி, ஒன்றியச் செயலாளர்கள் முத்துப்பாண்டி, பால்பாண்டி, புகழேந்தி, காங்கிரஸ், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி, பொதுக்குழு உறுப்பினர் உச்சநீதி மன்ற வழக்கறிஞர் இ.எம்.எஸ். ஜெயசிம்மன், டி. கணேசன், சன்னாசி, மலைச்சாமி அ.சிதம்பரம், எம்.ராஜரத்தினம்,

ம.தி.மு.க. மாவட்டப் பொருளாளர் சார்லஸ் ஒன்றியச் செயலாளர் வீரையா மற்றும் பல்வேறு அமைப்பினை சேர்ந்தவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். மூவேந்தர் கழகம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் அன்னதானங்கள் வழங்கப்பட்டது. மருதுபாண்டியர் நினைவு நாளை முன்னிட்டு ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. எம்.துரை தலைமையில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் தலைமையில் 2000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

சிவகங்கை, கல்லல் காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், நாட்டரசன் கோட்டை ஆகிய ஊர்களில் வாகன சோதனைச் சாவடிகள் சி.சி.டி.வி. கேமராவுடன் அமைக்கப்பட்டிருந்தது. தவிர 30க்கும் மேற்பட்ட ரோந்து வாகனங்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். பாதுகாப்பு பணியில் திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து போலீசார் பாதுகாப்பு பணிகளுக்காக வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

### குற்றவாளிகளின் கூடாரமாக பா.ஜ.க. உள்ளது!

# பகிரங்க கொலை மிரட்டல் விடுக்கும் பா.ஜ.க. கிரிமினல் எம்.எல்.ஏ.!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம்!

சென்னை, அக். 29-

ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குஷ்வாஹா சஷீபூஷ்ன் மேத்தா என்பவர் ஒரு கொலை குற்றவாளி என்றும் அவர் தாடி வைப்பவர், தொப்பி அணிபவர், மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு எதிராக பகிரங்க கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்காத பா.ஜ.க. அரசு மீது கடும் கண்டனம் தெரிவித்து ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குஷ்வாஹா சஷி பூஷன் மேத்தா என்பவர் தாடி வைத்தவர்கள், தொப்பி அணி பவர்கள் அல்லது மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள் இந்து மதத் தலங்களுக்கு அருகில் கண்டால் அடித்துக் கொல்லப்படுவார்கள் என்று பகிரங்க கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்த வெறித்தனமான பேச்சு சமூக வலைதளங்களில் பரவி வருவது ஆபத்



பாஜக எம்எல்ஏவின் வெறுப்பூட்டும் பேச்சு

தானது. அந்த சட்டமன்ற உறுப்பி னர் ஒரு கிரிமினல். பள்ளி ஆசிரியர் ஒருவரை கொலை செய்த வழக்கில் 2012 ஆம்ஆண்டு கைதானவர். இருப்பினும் அப்போதைய பா.ஜ.க. ஆட்சியில் காவல் துறை போதிய ஆதாரத்தைத் திரட்டத்தவறிய தால் வழக்கில் இருந்து தப்பித்தார். இப்படிப்பட்ட கிரிமினலுக்கு 2019 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட பா.ஜ.க. வாய்ப்பு வழங்கியது என்றால் அக்கட்சியின் யோக்கியதையைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்திய அளவில் குற்றவாளிகளின் கூடாரமாக பா.ஜ.க. உள்ளது. இதே ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்டதாகக் கூறி 22 வயதான மின்ஹாஸ் அன்சாரி என்ற இளைஞரை பா.ஜ.க. ஆட்சியின் போது 2016ல் மதவெறி யர்களோடு இணைந்து காவல்துறையினரே அடித்துக் கொன்றனர். மின்ஹாஸின் கதறல் களை போன் மூலம் அவரது குடும்பத்தினரைக் கேட்க வைத்து உளவியல் ரீதியாக சித்ரவதை செய்த கொடுமையை நாடு மறக்கவில்லை. வட இந்தியாவின் உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியானா உள்பட பல மாநிலங்களில் மாட்டிறைச்சி வைத்திருந்ததாக இஸ்லாமியர்கள் பலர் கடந்த காலங்களில் மத வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

வெறுப்புப் பேச்சுக்காக பா.ஜ.க. எம்.எல்.ஏ. மேத்தா மீது இதுவரை எப்.ஐ.ஆர் பதிவு செய்யப் படவில்லை. பா.ஜ.க.வுக்கு எதிரான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா அரசு ஆட்சியில் இருந்தாலும் கூட (ஜே.எம்.எம்.) பா.ஜ.க. மீதான அதிகார வர்க்கத்தின் மென்மையான அணுகுமுறையே வழக்குப் பதிவு செய்ய தடையாக உள்ளது. வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மீது காவல்துறை தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அமல்படுத்தப்படுவதில்லை.

மாநிலத்தில் ஆளும் கட்சியாக உள்ள ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா மற்றும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் மேத்தாவின் கருத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளன. இதோடு நிறுத்திக் கொள்ளாமல் காவல்துறையை கொண்டு அவர் மீது உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். வெறி யூட்டும் கருத்துக்களை தெரிவிப்போர் யாராக இருந்தாலும் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள் என்ற நிலையை உருவாக்குவதாக அந்த நடவடிக்கை அமைய வேண்டும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தனது கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

# ‘இந்தியா’ ‘பாரத்’ பெயர்; வீண் சர்ச்சை வேண்டாம்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, அக். 29-

‘இந்தியா’ பாரத் பெயர் விவகாரத்தில் வீண் சர்ச்சை வேண்டாம் என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

இந்திய அரசியல் சட்டத்தின் முதல் அட்டவணையின் முதல் பிரிவிலேயே, “இந்தியா அதாவது பாரத் மாநிலங்களை உள்ளடக்கியதாக இருக்கும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டையக் கால இலக்கியங்களிலேயே பாரத் என்றும் இருக்கிறது, இந்தியா என்றும் இருக்கிறது. மகாகவி பாரதியார்கூட தன் பாடல்களில், இரு பெயரையும் குறிப்பிட்டுள்ளார். ஆக. இரு பெயர்களின் பயன்பாடும் எந்தவித, பிரச்சினையும் இல்லாமல் இருந்தது.

இப்படி எந்த பிரச்சினையும் இல்லாத நேரத்தில், கடந்த மாதம் டெல்லியில் நடந்த ஜி20 நாடுகளின் மாநாட்டையொட்டி. ஜனாதிபதி திரவுபதி முர்மு அந்த நாடுகளின் தலைவர்களுக்கு அளித்த விருந்துக்கான அழைப்பிதழில், திரவுபதி முர்மு, பாரத் ஜனாதிபதி என்று குறிப்பிடப்பட்ட தும், மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடிக்கு முன்பு வைக்கப் பட்டிருந்த பெயர் பலகையில், இந்தியா என்பதற்கு பதிலாக பாரத் என்று போடப்பட்டு இருந்ததும் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், தேசிய கல்விக் கொள்கையின்படி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான கவுன்சில் பள்ளிக்கூடங்களில், அதாவது மத்திய கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டங்களை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக, வரலாற்று ஆராய்ச்சி இந்திய கவுன்சில் உறுப்பினரான ஐசக் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஐசக் கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள சி.எம்.எஸ். கல்லூரியில் வரலாற்று பேராசிரியராக இருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். 7 பேர் கொண்ட இந்த குழு அனைத்து பாடப்புத்தகங்களிலும், இந்தியா என்ற பெயருக்கு பதிலாக பாரத் என்ற பெயர் இருக்கவேண்டும் என்று ஒரு மனதாக பரிந்துரை செய்துள்ளது. இதற்காக பல காரணங்கள் அந்த பரிந்துரையில் கூறப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல், 7 ஆயிரம் ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணத்தில் பாரத் என்ற பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவுக்குள் ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய கம்பெனி வந்த பிறகும், 1757ல் பிளாசி போருக்கு பிறகும்தான் இந்தியா என்ற பெயர் பயன்படுத்தப்பட தொடங்கியது.

எனவே, அனைத்து வகுப்புகளிலும் உள்ள மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களில் பாரத் என்ற பெயரே பயன்படுத்தப்படவேண்டும் என்பது உள்பட பல பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன. இந்த பரிந்துரை குறித்து பாடப்புத்தகங்களை தயாரிக்கும் மத்திய அரசாங்கத்தின் அமைப்புதான் முடிவு எடுக்கவேண்டும்.

இந்த பிரச்சினை குறித்து 2020ம் ஆண்டிலேயே சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு வந்த போது, தலைமை நீதிபதி போப்டே, நமது அரசியல் சட்டத்தில் பாரத், இந்தியா இரு பெயர்களுமே இருக்கின்றன என்று குறிப்பிட்டு, மத்திய அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தார். ஆக, இரு



தலையங்கம்

தினத்தந்தி

28.10.2023

பாடப் புத்தகங்களில் பாரத் பெயர்!



பெயர்களையும் பயன்படுத்துவதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்தியா என்ற பெயரை நீக்கிவிட்டு, பாரத் என்ற பெயரை மட்டும்தான் பயன்படுத்தவேண்டும் என்றால், அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு திருத்தவேண்டும். அனைத்து பாஸ்போர்ட்டுகளிலும், ரிசர்வ் வங்கி பெயர், ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் என்ற பெயர்கள் உள்பட, பல பெயர்களில் உள்ள இந்தியா என்ற பெயர் பாரத் என்று மாற்றப்பட வேண்டும். அதற்கு பதிலாக ஆங்கிலத்தில் இந்தியா, இந்தியில் பாரத் என்று இப்போது இருப்பதுபோல இரு பெயர்களுமே தொடர்ந்து இருந்துவிட்டு போகட்டுமே என்ற கருத்தும் நிலவுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி
### அக்டோபர் 29 (1995)



**திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.**

**கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தேசியமும் தெய்வீகமும் போற்றிய சேது வேங்கைத் தேவர் திருமகனார்!

“மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம், கங்கையே சூதகமானால் எங்கே நீராடுவது?” என்ற வரலாற்று வரிகளைத் தந்த தேவர் திருமகனார் பிறந்த நாள் இன்று! அவர் நினைவு நாளும் இதே அக்டோபர் 30 தான்.

ஒரே நாளில் இப்படியான பிறப்பும், இறப்பும் நடப்பது என்பது அபூர்வமானது. தேவர் வாழ்விலும் இது நடந்தது.

இராமநாதபுரம் கமுதி அருகே உள்ள “பசும்பூண்” எனும் சிறு நகர் தற்போது ‘பசும்பொன்’ என்று மருவி வழங்கப்படுகிறது. அதிலும் பழம்பெயரும், ‘இயற்பெயருமான ‘தவசிக்குறிச்சி’ என்பதே பிற்றை நாளில் ‘பசும் பொன்’ என்பது ஆயிற்று. பழங்காலத்தில் தவசியர்கள் என்ற முனிவர்கள் இங்குள்ள காட்டுப்பகுதியில் ஆசிரமங்கள் அமைத்து தவயோகங்களில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர் என்பதால் இப்பெயர் இடம்பெற்றது.

1908ஆம் ஆண்டு அக்டோபர் 30 வெள்ளிக்கிழமை அன்று வீரர் எனும் மறவர் குடியில் தந்தை உக்கிரபாண்டியத்தேவருக்கும், தாயார் இந்திராணி அம்மையாருக்கும் பிறந்தவர் முத்துராமலிங்கத் தேவர் ஆவர்.

தமது தாயாரை ஆறு மாதக் குழந்தையாக இருக்கும்போதே இழந்த இவர், தம் பாட்டி இராணி அம்மையாராலேயே பெரிதும் வளர்க்கப்பட்டார் என்றாலும், ‘ஆயிஸா அம்மாள்’ என்கிற ஓர் இசுலாமியத் தாயாரிடம் பால் குடித்து வளர்ந்தார்.

பால் ஊட்டிய தாயார் மீது தன் கடமையுணர்வு மிகுந்தவராய், தமது நிலங்களை தானமாக அளித்து, இன்றுவரை அவரின் பரம்பரையினர் அதனை அனுபவித்து வருகிற நிலைக்கு உருவாக்கித் தந்துள்ளார். கல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த தேவர் திருமகன், ஆயிஸா அம்மாள் மறைந்து விட்டார் எனும் செய்தியறிந்து, நிகழ்ச்சியில் பங்கேற்காமல் ஓடோடித் திரும்பி வந்து அவர் அஞ்சலி செலுத்தி, அதற்கான ஈமச்சடங்குகளை செய்த பெருமையைச் சரித்திரம் பதிவு செய்துள்ளது.

‘இளமையில் கல்’ எனும் வாய்மொழிக்கேற்ப கமுதி அமெரிக்கன் மிஷன் ஆரம்பப் பள்ளி, 1920இல் மதுரை பசுமலை உயர்நிலைப்பள்ளி 1924இல் அய்க்கிய கிருத்துவ உயர்நிலைப் பள்ளி, பிறகு இராமநாதபுரம் அரசர் பள்ளியில் இறுதி வகுப்பு முடித்தார்.

இளமையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்யம் பெற்றிருந்ததோடு, சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஞானம், தத்துவம் போன்றவற்றிலும் தணியா ஆர்வம் காட்டிப் பயின்று நின்றார். தவிர, குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பம், துப்பாக்கி சுடுதல், வர்மக்கலை போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றார்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள் அதைப் போலச் சின்னஞ்சிறு பருவத்திலேயே முத்துராமலிங்கத்தேவர் வீரச்செயல்களில் ஈடுபட்டு எதற்கும் அஞ்சாதவராக வாழ்ந்து வந்தார்.

1927இல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கு, தனது அரசியல் குருவான சென்னை எஸ். சீனிவாச ஐயங்காருடன் சென்றிருந்தார். அம்மாநாட்டில் உரையாற்றியோர் சொற்பொழிவுகளிலிருந்து பல்வேறு தகவல்களைப் பெற்றதுடன், தேசிய தலைவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புகளையும் பெற்றார். காங்கிரசு இயக்க வளர்ச்சிக் கொள்கைகளில் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் பயன்பாடு, சமூகநீதி போன்றவற்றில் ஈடுபாடு காட்டியதுடன், சமயமும், நாடும் தமது இரு கண்களாகக் கருதினார்.

தேவர் திருமகனின் கன்னிப்பேச்சு 1933 ஜுன் 23ஆம் நாள் சாயல்குடி விவேகானந்தா வாசக சாலை முதலாமாண்டு விழாவின்போது நடந்தது. அவ்விழாவில் கலந்து கொள்ளத்தான் சென்றிருந்தார் தேவர். சேதுராம செட்டியார் தலைமை வகித்திருந்தார். ஆனால், விழாவிற்கு வரவேண்டிய சிறப்புப் பேச்சாளர் வரவில்லை. தற்செயலாக அங்கு வந்திருந்த தேவர் திருமகனை அழைத்துப் பேச வைத்தனர் விழாக்குழுவினர். மேடை ஏறினார் தேவர்.

“இந்திய விடுதலைக்கு ஒவ்வொருவரும் போராட வேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்து பேசினார். அவரது உரையைக் கேட்போர் வியக்கும் வண்ணமும், வசீகரிக்கும் வண்ணமும், வரலாற்றுச் சிறப்புடையதாக மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக அமைந்தன.

தலைசிறந்த ‘சுதேச மித்திரன்,’ ‘தமிழ்நாடு’ என்பன ஏடுகளை அந்நாள்களில் மக்களிடையே பரப்பியதுடன் வாசகர்கள் எண்ணிக்கையை உயர்த்திட நின்றார்.

1932இல் கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டார். மதுவால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார்.

1933-34இல் தொண்டர்களைத் திரட்டி முத்துராமலிங்கத் தேவர் கதர் பிரச்சாரம், மது ஒழிப்பு பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டி வந்தார்.

1934ஆம் ஆண்டு, ஆங்கில அரசு முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகமுடையார்மீது பழங்குடியினர் குற்றச்சட்டமான (Criminal Tribes Act) குற்றப்பரம்பரைச் சட்டத்தைத் திணித்தது. இதன்படி முக்குலத்தோர் என்போர் குற்றமிழைக்கும் பரம்பரையினராக அறிவிக்கப்பட்டனர். அவர்களது முழுவிபரமும், குடும்பப் பாரம்பரியமும் போன்றவை தொகுக்கப்பட்டு காவல் துறையால் பராமரிக்கப்பட்டு வந்தன. இதனால், ஆண்கள் மட்டுமின்றிப் பெண்கள், குழந்தைகள், முதியோர் கூடத் தீவிர கண்காணிப்புக்குள் ஆளாக்கப்பட்டனர். எங்குக் குற்றம் நடந்தாலும், அதற்கு முக்குலத்தோர்தான் காரணம் எனும் கெடுபிடிநிலை உருவானது. கைவிரல் ரேகை பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்கள் வெளியூர் சென்றாலும் காவல்துறை அனுமதி பெற வேண்டும். நண்பர்கள், உறவினர்களைச் சந்திப்பது, விழாக்கள் கூட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. முக்குலத்தோர்க்கு எதிரான இந்த இழிநிலையைப் போக்க முத்துராமலிங்கத்தேவர் வெகுண்டு எழுந்து போராடினார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை விரிவுப்படுத்தி, பேதங்களை உருவாக்கி, முக்குலத்தோரைத் தலைமுறை, தலைமுறையாக அவமானப்படுத்துவதான குற்றப் பரம்பரைச் சட்டத்தை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு மிக வன்மையாகக் கண்டித்தார். 1935இல் டாக்டர் நாயுடு தலைமையில் அபிராமபுரம் ஆப்பநாடு மறவர் மாநாடு நடைப்பெற்றது. அம்மாநாட்டில் குற்றப்பரம்பரைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1927 முதல் காங்கிரசில் இணைந்து பணியாற்றி வந்த தேவர், எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்டு காங்கிரசின் முடிவுகளைத் தவறாது பின்பற்றி வந்தார். பல தலைவர்களை வரவழைத்து, மதுரை, முகவை மாவட்டங்களில் பேச வைத்தார். தமது பேச்சாலும், எழுத்தாலும் சமூக மக்களுக்கு மட்டுமல்லாது, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மை புரியும் வகையில் நடந்து வந்தார். இதனால், அவரின் செல்வாக்கு காங்கிரசு கட்சியிடையே ஓங்கி வளர்ந்தது.

தென்பகுதியில் நடைபெற்ற ஜில்லாபோர்டு தேர்தல்களில் தமது கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற நின்றார்.

விருதுநகர் முனிசி பாலிட்டி தேர்தலில் காமராசர் அவர்களை வேட்புமனு தாக்கல் செய்திட ஏற்பாடு செய்தார். ஆனால், அத் தேர்தலில் வரி செலுத்தியவர்கள்தான் நிற்கவேண்டும் என்ற விதி இருந்தது. அதற்காக வெள்ளாடுகள் வாங்கிகொடுத்து வரி ரசீதைப் பெற்றுத் தந்தார். காமராசர் வேட்புமனு தாக்கல் செய்திட உதவினார். இதற்கிடையில் வாக்குகள் கேட்கும் நேரத்தில் காமராசர் எதிரிகளால் கடத்தப்பட்டார். ஆனால் தேவர் அவர்கள் உடனே விருது நகரில் ஒரு கூட்டம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

“நான் இந்த பொதுக்கூட்டத்தில் பேசி முடித்துவிட்டு கீழே இறங்குவதற்குள் காமராசரை இங்கு ஆஜர்படுத்த வேண்டும். இல்லையேல் பின்விளைவுகள் மோசமானதாக இருக்கும் என்று எச்சரிக்கை செய்தார். கூட்டம் முடிவதற்குள் காமராசர் மேடை முன் வந்து நின்று கைகூப்பினார்.”

1935ஆம் ஆண்டு கூட்டாட்சிச் சட்டப்படி தேர்தல் நடத்த ஆங்கிலேய அரசு எண்ணியது. அதனால், மாகாணங்களில் சுயாட்சி வழங்கப்படவும், மைய அரசில் இரட்டையாட்சி முறை ஏற்படவும் வாய்ப்பு உண்டாகியது. 1919ஆம் ஆண்டின் இரட்டையாட்சி மாகாணங்களில் வேண்டாம் எனவும்; தேர்தலில் போட்டியிட்டு பதவி பெறவேண்டும் எனவும் தீர்மானித்த காங்கிரசு கட்சி, 1935ஆம் ஆண்டு சட்டப்படி போட்டியிடலாம் எனவும் பதவி பெறலாம் எனவும் தீர்மானித்தது.



வெறும் பீடமாக இருந்த முத்துராமலிங்க தேவ அவர்கள் நினைவிடத்தை மணிமண்டபம் அமைத்து கொடுத்து போற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

ஆனால், காந்தியின் சீடரும், இந்திய விடுதலை போராட்டத்தில் பங்கேற்க தமது ஐ.சி.எஸ். பதவியைத் துறந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு இம்முறையானது மிகுந்த வருத்தம் அளித்தது. இதனால் அவரும், அவரைச் சார்ந்தவர்களும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் காங்கிரசு கட்சியின் தலைவர் பொறுப்புக்கு நேதாஜியே போட்டியிட்டார். அவரை எதிர்த்து காந்தியார் பட்டாபி சீத்தாராமையாவை நிறுத்தினார். சத்திய மூர்த்தி ஐயர், இராஜாஜி போன்றோர் பட்டாபியை ஆதரித்தனர். ஆனால், தேவர் திருமகனார் சுபாஷ் சந்திரபோசுக்கு ஆதரவளித்தார். ஏனெனில், பேசியதை இறுதிவரையில் பற்றுவது என்பன நேதாஜியின் பண்பாடாக இருந்தது. தேவருடன், சீனிவாசய்யங்காரும், இன்னும் பலரும் நேதாஜியை ஆதரித்தனர்.

தேர்தலில் நேதாஜி பெரு வெற்றி பெற்றார். ஆங்கில அரசோ கதிகலங்கி கைபிசைந்து நின்றது. தேவர்மனம் மகிழ்ந்து, நேதாஜி தலைமையில்தான் காங்கிரசு விரைவில் விடுதலையை சாதிக்கும் என்றார்.

எனினும், காந்தியார் மனம் சோர்ந்து பட்டாபியின் தோல்வி என் தோல்வி என்று வெளிப்படையாக அறிவித்தார்.

இந்நிலையில் 1937ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாட்டு பொதுத்தேர்தலில் காங்கிரசு சார்பில் போட்டியிட்ட முத்து ராமலிங்கத் தேவர், எதிர்த்து போட்டியிட்ட இராமநாதபுரம் மன்னர் சேதுபதியைத் தோல்வியுறச் செய்து வெற்றி கண்டார். வடக்கே பொப்பிலி அரசரை தோற்கடித்து வி.வி.கிரி வெற்றி கண்டார்.

இருந்தபோதும் காங்கிரசு கட்சி மீது நேதாஜி போன்ற முத்துராமலிங்கத்தேவர் அதிருப்தி அடையும் நிலை உருவானது. ஏனெனில், தமிழ்நாட்டில் பிரதமராக இருந்த இராஜாஜி குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் திரும்பப் பெறாமல், காலதாமதம், தயக்கம் காட்டியதெல்லாம் தேவருக்கு மிகுந்த வருத்தமாக அமைந்தன.

இவ்வாறான சூழ்நிலையில், அகில இந்திய அளவில் காங்கிரசு கட்சியின் செயல்பாடுகள் நேதாஜிக்கு அதிருப்தி தந்தன. அதனால், காங்கிரசு கட்சிக்குள்ளேயே அதிருப்தியாளர்களானவர்கள் தீவிரவாத கொள்கையை அடிப்படையாக கொண்டு முன்னேற்ற அணி அல்லது ‘ஃபார்வார்டு பிளாக்’ என்ற குழுவை உருவாக்கினர். பேராசிரியர் என்.ஜி.ரங்கா, கவிஷர், நாரிமன், சேனாதிபதிபாபட் போன்ற தேசியத் தலைவர்கள் வரிசையில் முத்து ராமலிங்கத் தேவரும் அதில் இணைந்தார்.

1939இல் காங்கிரசு கட்சியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு முழுமையாக ஃபார்வர்டு பிளாக் கட்சியில் சேர்ந்து உழைத்தார். நேதாஜியை தமிழ்நாட்டில் பல இடங்களுக்கு அழைத்து வந்து ஆதரவு திரட்டி பொதுக்கூட்டங்களில் பேச வைத்த பெருமை தேவருக்குண்டு. இதனால் தேவர் மற்றும் அவரைச் சார்ந்தோர் சிறை செல்ல நேரிட்டது. ஆங்கில அரசால் அடிக்கடி கைது செய்யப்பட்டார். துன்பம் தனியே வருவதில்லை. (Misfortune Never comes Alone) என்ற ஆங்கிலம் பழமொழி எவ்வளவு உண்மை என்பது தேவர் வாழ்வில் அடிக்கடி நடந்து வந்தது.

இரண்டாம் உலகப்போர் காலக்கட்டத்தில் பசும்பொன் தேவரும் அவரது தோழர்களும் ஆங்கில அரசை விமர்சித்து வந்தனர். இந்நிலையில் தேவரை மதுரை நகரிலிருந்து வெளியேறக் கூடாது என்று மதுரை மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்போட்டார். ஆனால் தனது சொந்த ஊருக்கு செல்லாமல் இருக்க இயலாது என்று புறப்பட்டபோது இரயில் அடியில் கைது செய்யப்பட்டார். திருச்சி, வேலூர், அலிப்பூர், ராஜமந்திரி, மத்திய மாகாண இராணுவ முகாம் அமைந்த ‘டாமு’ சிறை என மாற்றி 6 ஆண்டுகள் சிறை கண்ட தேவர் 5.9.1945இல் தான் விடுதலையானார்.

அந்நேரத்தில் நேதாஜி சுதந்திர இந்திய அரசை அமைப்போம் என பிரகடனம் செய்தார். அதற்கான இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கினார். ஃபார்வர்டு பிளாக் கட்சி தடைசெய்யப்பட்டது. அதனால் பசும்பொன் தேவர் நீண்டகாலம் அடைக்கப்பட்டார்.

நான் செய்கிற நன்மைகள் எல்லாம் இந்த நாட்டிற்குச்சேரட்டும்; அதனால் வரும் தீமைகள் எதுவாயிருந்தாலும் அவை என்னைச் சேரட்டும்” என்றார் தேவர்.

(Nationality and Divinity are my two eyes.
Do your duty. Don’t expect any benefits.)
என்றார்.

1952இல் விடுதலை இந்தியக் குடியரசின் முதல் பொதுத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றம், டெல்லி பாராளுமன்றம் ஆகிய இரண்டு தேர்தலிலும் போட்டியிட்ட அவர் இரண்டிலும் வெற்றி பெற்றார். பின்னர் பாராளுமன்றப் பதவியை விட்டு விலகி, அத் தொகுதியில் எம்.டி. ராமசாமியை நிற்க வைத்து வெற்றிபெறச் செய்தார்.

சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் நடைபெற்ற தேர்தலில் தொகுதிக்கு வாக்கு கேட்டு செல்லாமலேயே வெற்றி பெற்றவர் தேவர் திருமகனார்.

1946இல் ஆட்சிப்பொறுப்பேற்ற முதல்வர் பிரகாசம் தேவர் திருமகனை அழைத்து தொழில்துறை, உள்துறை, அமைச்சர் பொறுப்பேற்க அவரை அன்பாக வலியுறுத்தினார்.

எனக்கு மந்திரிப் பதவியை காட்டிலும் மக்கள் பணியே சிறந்தது என்று மறுப்புத் தெரிவித்தார்.

1955இல் நாக்பூரில் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1955 முதல் 1956களில் பர்மியத் தமிழர்கள், மற்றும் அரசின் அழைப்பை ஏற்றுச் சுற்றுப் பயணம் செய்து, தமிழ், புத்தமதம், இலக்கியங்கள் பற்றி பரப்புரை நிகழ்த்தித் திரும்பினார்.

1957இல் இராஜாஜி காங்கிரசு கட்சியிலிருந்து விலகினார். தேவர் சிறீவில்லிப்புத்தூர் பாராளுமன்றத் தொகுதியில் மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து எவரும் மனுப்போடவில்லை. இதில் பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினர் பொறுப்பை மட்டும் வைத்துக்கொண்டு முதுகுளத்தூர் தொகுதி உறுப்பினர் பதவியை விட்டு விலகி, அதில் தமது நண்பர் சசி வர்ணத்தேவரை நிறுத்தி வெற்றி பெறச் செய்தார்.

அத்தேர்தலில் காங்கிரசு சீர் திருத்தக் கட்சியினர் பெரும்பான்மையினர் வெற்றி பெற்று எதிர்க்கட்சியாக அமர்ந்தது. அதன் தலைவராக வி.கே. ராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதுகுளத்தூர் கலவரம் நடந்தபோது, “எந்த ஒரு சமுதாயமாக இருந்தாலும், அமைதியைக் குலைக்க எண்ணி வன்முறையில் ஈடுபட்டால்; அது என் இதயத்தைப் பிளந்து இரத்தத்தைக் குடிப்பதற்கு சமம்” என்று உருக்கமாக முழக்கமிட்ட அவர்; மக்களிடையே ஒற்றுமை பேண நடவடிக்கை எடுத்து வந்தார். தன்னினமான முக்குலத்தோராக இருந்தாலும், வேறு சமுதாயமாகயிருந்தாலும் நீதி தவறாமல் முடிவு கண்டு அனைவரிடத்திலும் அன்பு பேணி வந்தார்.

கலவரத்தில் இரு சமூகத்திற்கிடையில் ஏற்பட்ட மோதலால் 1957 செப்டம்பரில் பரமக்குடி இமானுவேல் எனும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். அப்போது மதுரை காங்கிரசு சீரமைப்பு மாநாட்டுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய பசும்பொன் தேவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

முதலில் சென்னை, பின் புதுக்கோட்டைச் சிறைகளில் அடைக்கப்பட்டார். இமானுவேல் கொலை வழக்கில் முதல் எதிரியாக அவர்மீது வழக்குகள் புனையப்பட்டன. விசாரணையில் மதுரை ஆட்சியர் தந்த சாட்சியம்படி நீதிபதி எம். அனந்த நாராயணன், இமானுவேல் கொலைக்கும், தேவருக்கும் எந்தத் தொடர்புமில்லை எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான தேவரைத் தெய்வத் திருமகன் என்று முக்குலத்தோர் மற்றவர்களும் போற்றி வந்தனர்.

1957ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தேவர் திருமகன் இரண்டு ஆண்டுக்குப்பிறகுதான் முதல் நாடாளுமன்ற உரையை நிகழ்த்த முடிந்தது. 13.2.1959இல் அவர் ஆற்றிய பதினைந்து நிமிட சொற்பொழிவு

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழு உறுப்பினர்



பற்றி இந்திய எக்ஸ்பிரஸ் ஏடு “Mr. Muthuramalinga Devar. THE LAST SPEAKER OFF THE DAY. Held the Attention of the House Fiery oratory என்று எழுதி பெருமைப்படுத்தியது.

ஆனால், ஒன்றரை ஆண்டுகாலமாக பதவி ஏற்புக்குக்கூட செல்ல முடியவில்லை; தொடர்ச்சியான பயணங்கள், போராட்டங்கள்; அதனால் பல ஆண்டுகள் சிறைகள், என உடல்நலம் குன்றியிருந்தார். எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் 6 மாதத்திற்குள்ளாக பொறுப்பு ஏற்க வேண்டும். இல்லை எனில் பதவியிழப்புக்கு உள்ளாவார். விடுதலை வீரர் தேவரின் பெருமையை உணர்ந்த பிரதமர் நேரு அவர்கள், சட்ட விலக்குத் தீர்மானம் கொண்டு வந்து, தேவரின் தேசபக்திக்கு நன்றி பாராட்டினார்.

1962 பாராளுமன்றத் தேர்தலில் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராஜாஜியின் சுதந்திரா கட்சி அவருக்கு ஆதரவு தந்திருந்தது.

காடு, கழனி, பாசன நிலப்பரப்பு 1 இலட்சம் பனைமரங்கள் என 32 1/2 கிராமங்கட்குச் சொந்தமான பெரும் நில உடைமைதாரரான தேவர், விவசாயிகளுக்கு அவலநிலை ஏற்பட்டபோது, அவர்களுக்காக துணைநின்று ‘விவசாயிகள் மாநாடு’ ஒன்றினை இராஜபாளையத்தில் நடத்தினார். அம்மாநாட்டில் நம்பூதிரிபாடு, ஏ.கே. கோபாலன், பி. இராமமூர்த்தி, ஜீவானந்தம், சீனிவாசராவ் போன்ற இடதுசாரித் தலைவர்களை பங்கேற்க வைத்துப் ‘ஜமீன் ஒழிப்பு’ப் போராட்டத்துக்கு வழி வகுத்தார். இதனால், சிறீ பிரகாசர் தலையில் “ஜமின்முறை ஆய்வுக்குழு’ ஒன்றை நிறுவி, அதன் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி வைத்தார். அதனால் விவசாயிகளின் கண்ணீர் துடைக்கப்பட்டது.

தேவர் பெருமகனார் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். அதே காலத்தில் இயங்கிய 23 தொழிற்சங்கங்களில் தேவர் தான் தலைவராகவும் கம்யூனிஸ்ட்டைச்சேர்ந்த ஜீவா துணைத்தலைவராகவும், செயலாளராகவும் டி.வி. சசிவர்ணம், ராமனாதன் போன்றோர்கள் இருந்து பணியாற்றிவந்தனர். 193839 மதுரை மகாலட்சுமியில் தொழிற்சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தபோது மிகப் பெரிய போராட்டம் நடத்தியதால், அவர்மீது வன்முறை தூண்டியதாக வழக்கு புனையப்பட்டு (I.P.C. 110) பிரிவுப்படி 6 மாதங்கள் சிறை எனத் தீர்ப்புரை வழங்கி திருச்சி, வேலூர், அமராவதி சிறைகளில் அடைக்கப்பட்டார்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற குறள்படி சாதிக் கொடுமைகளைச் சாடி வந்தார். முருகன் பக்தரான அவர் குறவர் குல வள்ளியை முருகன் மணந்தது ஏன்? என்று கடவுளை அடையாளங்காட்டினார்.

“நான் குழந்தையாக பிறந்து 6 மாதத்தில் அன்னை தவறிய நிலையில் ஒரு முஸ்லீம் அன்னை தான் எனக்கு பால் புகட்டினார்; எனக்கு கிறித்துவ ஆசிரியர்கள் தான் கல்வியைத் தந்தார்கள். என் பெற்றோர்கள் இந்துக்கள்” இதில் எங்கே சாதி இருக்கிறது. நான் தேர்தலில் நின்றபோது, என் இனத்தைச் சேர்ந்தவர்கள் 18,000 பேர்தான். ஆனால் நான் வாங்கிய வாக்குகள் இதர சமுதாயம், நாத்திகர்கள் எல்லாம் 2 லட்சத்திற்கு மேல் வழங்கியவை ஆகும்.” என்று மதுரை தமுக்கம் மைதானப் பொதுக்கூட்டத்தில் (1411962) பேசி வெளிப்படுத்தினார்.

மதுரை ஆலய பிரவேசம் நடத்திட காங்கிரசு இயக்கத் தலைவர் வைத்திய நாதய்யர் நேரில் வந்து, தேவரிடம் அழைப்பு விடுத்தார். அதற்கு ஆதரவு தெரிவித்த தேவர், தான் மீனாட்சி நூற்பாலை போராட்டத்தில் உள்ளேன். அதே நேரத்தில் ஆலயப் பிரவேசத்தினை யாரும் தடுத்தால் விரைவில் ஆயிரக்கணக்கான இந்துக்களோடு தாழ்த்தப்பட்ட மக்களையும் படையாக மாற்றி அனைத்து இந்துக்கோயில்களிலும் ஆலயப் பிரவேசம் செய்வேன்” என்று அறிவிப்பு செய்தார். அத்துடன் பலரை அனுப்பி, கோயில் வளாகச் சுற்றுச்சுவர் உட்பகுதியில் வரிசையாக நிற்க வைத்து ஆலய பிரவேசத்துக்கு உதவி செய்தார். அந்த வெற்றியைக் கண்டு மதுரை ஆட்சியர் தேவரை ‘மாமனிதர்’ எனப் போற்றினார்.

சாதியில் உயர்ச்சி, தாழ்ச்சியில்லை; இரண்டு கரங்களைச் சேர்த்துக் குவித்தால்தான் தெய்வத்தை வணங்க முடியும் என்று மனித நேயம் பேசியவர் தேவர். தமிழகத்தின் எந்தப் பகுதிக்கும் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது தங்க நேரிடும்போதும் சாப்பிட நேரிடும்போதும், முக்குலத்தோர் வீட்டின் ஏற்பாடுகள் ஏற்க மாட்டார் அதற்கு மாறாக, செட்டியார், பிள்ளையாதவர், நாயுடு, தாழ்த்தப்பட்டோர் என மற்ற சமுதாயத்தினர் வீட்டில்தான் சாப்பிட விரும்புவார். இப்படியான வரலாற்றுக்குச் சொந்தக்காரரான பசும்பொன்தேவர், ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனக்குச் சொந்தமான நிலங்களை இனாமாக தானம் செய்தார்.

அரிசன மக்கள் வேறு யாருமல்ல. அவர்களும் என் அன்புச் சகோதரர்கள். அவர்களைத் தாக்க நினைத்தால், முதலில் என்னை அழித்துவிட்டு பின்பு அவர்களிடம் செல்லுங்கள்’ என்று அறிவுறுத்தினார்.

சாதி என்பது பச்சை அநாகரிகம்; சாதியையும், நிறத்தையும் பார்ப்பவன் அரசியலுக்கு லாயக்கில்லை; சாதி பார்ப்பவன் தெய்வத்தை வணங்குவதில் பொருளே இல்லை; அரண் மகன் குமரனையும், குறமகள் வள்ளியையும் தம்பதிகளாகக் காட்டுகிறது நமது புராணம்” என்று பேதமை நீங்கிப் புத்தி புகட்டினார். அருந்ததிய வகுப்பைச் சேர்ந்த டி. மொக்கையன் 1962ஆம் ஆண்டு ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் நிற்கவைத்து வெற்றிபெற வைத்தப் பெருமை தேவர் பெருமகனாரைச் சாரும்.

பதவியை ஒரு சேவையாகக் கருத வேண்டும் என்றவர். சட்டமன்றத்தில் 1955-56 ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின்போது (3.3.1955) பேசிய தேவர் அவர்கள், ‘தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குங்கள்’ என்று கண்டிப்புக் காட்டிப் பேசினார்.

ஆயிரக்கணக்கான மக்கள்கூடும் அவையில் எவ்விதக் குறிப்புமில்லாமல், கடல் மடை திறந்தாற்போல பேசும் எப்பொருள் பற்றியும் ஆற்றல் பெற்றவர். மேடையிலும் தனிப்பட்ட முறையிலும் கொச்சைத் தமிழில் பேசமாட்டார். அவர் அழகிய இலக்கணத் தமிழில்தான் பேசுவார். ஒரு சமயம் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயம் பற்றி ஆங்கிலத்தில் மூன்று மணி நேரம் பேசி அனைவரையும் அசத்தினார். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய பல்கலைக் கழகத் துணை வேந்தர் சர்.சி.பி. ராமசாமி ஐயர் வியப்புற்று “உலகின் பெரும் பகுதியை ஆங்கில மொழி ஆளுகிறது. உலகாளும் அம்மொழியை எங்கள் தமிழ் நாட்டு பசும்பொன் தமிழ்ச்சிங்கம் ஆள்கிறது” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

தேசத்திற்காக எழுதுகிறேன்; பேசுகிறேன் வெள்ளையர் அரசை வேரறுக்க வேண்டும் திபத்திலிருந்து வரும் அகதிகளிடத்தில் காட்டுகின்ற அக்கறையை ஏன் ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களிடம் காட்டவில்லை என்று போர்க்குரல் எழுப்பினார்.

நான் வன்முறையை விரும்பாதவன். வாய்ப்பூட்டுச் சட்டம் எதற்கு? என்று பல வினாக்கள் எழுப்பினார். வடபுலத்திலே திலகர் அவர்களுக்கும் தென் பகுதியிலே தேவர் அவர்களுக்கும் தான் வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது.

உலகப்போகம், பொருள், புகழ் இவையனைத்தையும் விட்டொழித்தவராய் பற்றற்ற வாழ்வைப் பெரிதும் விரும்பிய பண்பாளர் தேவர்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அரசின் எவ்வித சலுகைகளோ, சம்பளமோ, விமான, இரயில் பயண அரசு செலவுகளையோ ஏற்றுக்கொண்டதில்லை.

தேவர் தனது இறுதிக்காலத்தில் மதுரை திருப்பரங்குன்றத்தில் தங்கி உடல் நலிவுற்ற நிலையில் இருந்து வந்தார். அவர் ஆங்கில மருந்துகளையோ அறுவை சிகிச்சையோ விரும்பாதவர். சித்த வைத்தியம் மேல் அவர் பற்று கொண்டு சிகிச்சை பெற்று வந்தார்.

வெப்பு நோய் பாதிப்பால் உடல் நலிவுற்றிருந்த தேவர் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30இல் தனது 55 ஆவது வயதில் காலமானார்.

“அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இன்றைய மிகப்பெருந்தலைவர் மறைந்து போனார்” என்று அறிஞர் அண்ணா தமது இரங்கல் அஞ்சலியில் புகழாரம் சூட்டினார்.

“தேசியம் காக்கும் செம்மல், சேது வேங்கை, பிற வசன கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், மனிதருள் முருகன், தென்னாட்டுத் திலகர், தென்னாட்டு விவேகானந்தர், தென்னாட்டு போஸ், காங்கிரசு காத்தான் எனப் பலவாறாக சிறப்புப் பட்டங்கள் தேவர் திருமகனார்க்கு அளிக்கப்பட்டன.

தேவர் திருமகனார் அடிக்கடி அவர் பேசிவரும் கூட்டங்களில் தனக்கே உரிய மரபுத்தொடர்களை பயன்படுத்துவார். அவை யாவும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அன்று தேவர் சொன்னதை தி.மு.கழக ஆட்சியில் முதல்வராக இருந்த கலைஞர் செய்து சாதனைகளாக்கினார்.

ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாக கலைஞர் அரசு வழங்கியது.

1954, மார்ச் 24 சட்டசபையில் தேவர் சொன்ன அந்த கருத்து, ‘வீணாகக் கிடக்கும் பெரும்பாலான நிலங்களை பெரும் பணக்காரர்களுக்கு மீண்டும் மீண்டும் கொடுக்க வேண்டும் என்ற பழக்கத்தை நிறுத்தி, ஏழைகளுக்கு ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என விவாசயத்திற்கு லாயக்காய் புதிதாக நிலம் வழங்கப்படுமானால் அவர்கள் யாரையும் எதிர்பாராமல் முயற்சி செய்து வாழ வசதி ஏற்பட்டது.

தி.மு.க. தலைவராக இருந்த கலைஞர் அவர்கள், அண்ணாவிற்குப் பிறகு அரியாசனம் ஏறினார். அவர் முதல்வரானதும் தேவர் சமாதியில் நினைவாலயம் கட்ட உதவி புரிந்தார். கலைஞர் ஏற்பாட்டில் மதுரை கோரிப்பாளையத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவில் ஆசியாவில் மிக உயரமான சிலை தேவர்க்கு எழுப்பி, அதனை இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களால் (5.1.1974) திறந்து வைக்கப்பட்டது. கழக ஆட்சியில் நெல்லை மாவட்டம் மேலைநீலித நல்லூர், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆகிய இடங்களில் தேவர் பேரால் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. உசிலம்பட்டி கல்லூரி முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணாவால் தொடங்கி வைக்கப்பட்டது. 1973 முதல் கலைஞர் முக்குலத்தோர் இன மக்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மேன்மைபெற உதவினார். சீர் மரபினர் என்பவர்களாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்தார். மேலும் தற்போது முதல்வர் தளபதி அவர்கள் முக்குலத்தோர் சமுதாயத்திற்காக கல்வி வேலைவாய்ப்பு பெறுவதற்கான பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர் பெருமக்களாக வாய்ப்பு தந்து உதவியுள்ளது தி.மு.க. அதுமட்டுமல்லாது கழகத்திலும் முக்குலத்தோர் சமுதாய மக்களுக்கு பல்வேறு பொறுப்புகள் தந்து சிறப்பித்து வருகிறார்.

ஆகவே தேவர் பெருமகனார் சுத்தத் தியாகியாகவும் தேசியத் தலைவராகவும் அறம் வளர்த்தவராகவும், போர்க்குண உருவம் படைத்தவராகவும், சாதி, சமய வேறுபாடுகள் அற்றவராகவும், பண்பும், பாசமும், அடக்கமும் கொண்ட பெருந்தலைவராகவும் விடுதலைப் போராட்ட தேச பக்தராகவும், சுத்த பிரம்மச்சாரியாகவும், ஒழுக்கம் வளர்க்கும் பேச்சு ஞானியாகவும்,சிறந்த மனிதாபிமானியாகவும், சமதர்ம சிற்பியாகவும் நமக்கெல்லாம் அடையாளமாக இருந்தவர்தான் பசும்பொன் தேவர் அவர்கள்.

தேவர் திருமகனார் புகழ் ஓங்குக!

## தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (நான்காவது பட்டியல்)

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அரியலூர் மாவட்டம்**

தலைவர் - முனைவர் ஆ. அருள், பெரியார் நகர், நெய்வணம் செந்துறை ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - முனைவர் ஜெகநாதன், செட்டித்திருக்கோணம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

அமைப்பாளர் - **ஜான் வின்சென்ட் ராஜா**, ஸ்ரீராம் நகர், திருமானூர், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - பாலமூர்த்தி, சன்னாவூர், திருமானூர் ஒன்றியம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். கோபி, நந்தியன்குடிகாடு செந்துறை வட்டம் அரியலூர் மாவட்டம். திருக்குமரன், கோட்டைவாசல், உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம். அசோக், பூக்காரத்தெரு, அரியலூர், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். கௌதம், இராயம்புரம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். செ. மணிமொழி, அழகாபுரம் அஞ்சல், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர் - எம். பாருக், 138, இரணியன் நகர், சீர்காழி.

துணைத் தலைவர் - தங்க. இரவீந்திரன், சிவன்கோவில், கீழத்தெரு, தேரழுந்தூர்-609808.

அமைப்பாளர் - **வி. சௌமியன்** , 83, குறிஞ்சி தெரு, திருவள்ளுவர் நகர், (பாண்டியன் தோப்பு), மயிலாடுதுறை-609001.

துணை அமைப்பாளர்கள் - எ.ஜி. இளங்கோவன், 33, நகராட்சி மருத்துவமனைத் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை 609 001. வி.எஸ். திருமூர்த்திராஜன், அபிஷேக்கட்டளை தெரு, திருக்கடையூர், தரங்கம்பாடி (Tk). கே. மகேஷ், 4-169, கீழையூர், மகாராசபுரம், மயிலாடுதுறை. எஸ். இரமேஷ், 3/134, மாரியம்மன், கோவில் தெரு, திருவெண்காடு அஞ்சல். ஆர். உதயராமன், மேலத்தெரு, சோழம்பேட்டை, மயிலாடுதுறை. எம். கருணாகரன், 3/149, பசும்பொன் தெரு, பொன்னிநகர், சீனிவாசபுரம், மயிலாடுதுறை-609301. ம. ஜீவானந்தம், மந்தைவெளித்தெரு, 4, கடலங்குடி, வானதிராஜபுரம் அஞ்சல், குத்தாலம் தாலுக்கா, மயிலாடுதுறை. எஸ்.வி.ஆர். திருச்செல்வன், 57/14, வ.வு.சி. கிழக்குதெரு, தென்பாதி. ஜெ. சதீஷ், மெயின்ரோடு, கொள்ளிடம் அஞ்சல், சீர்காழி தாலுக்கா. சி. ராமன், 3/132, மீனவர் காலனி, புவனகிரி, சீர்காழி தாலுக்கா.

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - **இரா. ரத்தினகுமார்,** 8, 4வது தெரு, பெரியார் நகர், இரும்புலியூர், சென்னை-600045. துணை

துணை அமைப்பாளர்கள் - **த. கணேஷ்** , 15, திருவள்ளுவர்பேட்டை, அனகாபுத்தூர், சென்னை-600 070. எ. சங்கர், 26, 4வது தெரு, யஷ்வந்த் நகர், மாடம்பாக்கம், சென்னை-600126. பு.ந. ராஜேஷ்குமார், 28, காந்தி ஜி, 5வது குறுக்கு, மகாசக்தி காலனி, செம்பாக்கம், சென்னை-600073. ப. ரமேஷ், 35, பொன்னியம்மன் கோயில் தெரு, பழைய பல்லாவரம், சென்னை-600117. எம்.ஆர். ராமச்சந்திரன், 39, இந்திரா நகர், பாரதமாதா தெரு, சிட்லபாக்கம், சென்னை-600047.

**திருப்பூர் வடக்கு மாநகரம்**

அமைப்பாளர் - **டி.கே. தண்டபாணி,** 340, செல்லம்மாள் காலனி, சாமுண்டிபுரம், திருப்பூர்-641603.

துணை அமைப்பாளர்கள் - க. குமார், கூலிபாளையம், வாவிபாளையம், திருப்பூர்-641666. பி.பாலசுப்ரமணியம், 35, டி.எஸ்.ஆர். லேஅவுட் 2-வீதி, கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607. ர. வேலுச்சாமி, 1-பிச்சம்பாளையம், விரிவு 1-வீதி, காந்திநகர், திருப்பூர்-641603. க. சண்முகம், 8/151-பி, அம்மன் நகர், பூலுவபட்டி, திருப்பூர்-641602. க. ஈஸ்வரன், நாகாத்தம்மன் கோவில் வீதி, சாமுண்டிபுரம், காந்திநகர், திருப்பூர்-641603.

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

அமைப்பாளர் - **கேபிள் விஜய் (எ) எஸ்.விஜயகுமார்,** 25, கொங்கணகிரி, 4-வீதி, காலேஜ் ரோடு, திருப்பூர்-641602.

துணை அமைப்பாளர்கள் - நே. ராஜேஷ்குமார், 345 கே.என்.பி. சுப்ரமணி நகர், நல்லூர், திருப்பூர்-641604. எஸ். டி. பாரதிராஜா, எ/100, குளத்துப்பாளையம், வீரபாண்டி, திருப்பூர்-641605. ச. சுரேஷ் குமார், 2/283, வீரபாண்டி, மெத்தகடை, வீரபாண்டி, திருப்பூர்-5. வீ. பிரபு, ஜெ.ஜெ. நகர் முதல் வீதி, வீரபாண்டி, திருப்பூர்-641605. கோ. சக்திவேல் 316, கே.என்.பி. சுப்ரமணி நகர், நல்லூர், திருப்பூர்-641604.

**நாகர்கோவில் மாநகரம்**

தலைவர் - சு. ரவிச்சந்திரன், 17, தோப்பு வணிகர் நடுத்தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629001.

துணைத் தலைவர் - ரா. கணேசன், 3/33, லைப்ரரி தெரு, கரியமாணிக்கபுரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் - **ரெ. சகாய மைக்கேல் ராஜன்,** 2-156சி, சர்ச் தெரு, பள்ளவிளை, பெருவிளை அஞ்சல், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் - 629003.

துணை அமைப்பாளர்கள் - சொ. ராஜா (எ) சுதேசன், 1/117, பிள்ளையார் கோவில் தெரு, செட்டி தெரு, பறக்கை, கன்னியாகுமரி மாவட்டம். த. குமார், 149, அறுகுவிளை, அறுகுவிளை மெயின் ரோடு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். ஆன்றனி பபின், 266, கென்னடி தெரு, ராமன்புதூர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். எஸ். எஸ். அனிஷ் குமார், 2/122, புதுகாலனி, புளியடி, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். வ. வீரவாகு, 38, கம்பளம் ரோடு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் - நெல்லையப்பன், 31, தெப்பகுள கீழ தெரு, திருநெல்வேலி டவுண்.

துணைத் தலைவர் - எஸ். ராஜேஷ், 27, செல்வி நகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி ஜங்ஷன்.

அமைப்பாளர் - **எம்எஸ்பி. சரத் மணி,** ஏ/53, 5வது குறுக்குத்தெரு, என்.ஜி.ஓ. ஏ காலனி, பெருமாள்புரம். எல். பாலசுப்பிரமணியன், 29, எஸ்டி.சி, 1வது தெரு, பெருமாள்புரம், பாளையங்கோட்டை. சி. முத்துகுமார் , சி.19, ஆதிபராசக்தி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. அன்னராஜா, 17/2, பெருமாள் தெற்கு ரதவீதி, திருநெல்வேலி சந்திப்பு. ஜே. ஸ்ரீராம், 633, காவேரி சாலை, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி டவுண். பி. சுடலைகண்ணு, 19, ஆர்.எஸ்.ஏ. நகர், கரையிருப்பு, திருநெல்வேலி.

**காஞ்சிபுரம் மாநகரம்**

தலைவர் - வீனஸ் உதயகுமார், சுக்கலாபாளையம் தெரு, காஞ்சிபுரம்.

துணைத் தலைவர் - ஆர். வெங்கடேசன், வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம்.

அமைப்பாளர் - **என். மாதவன்,** 434,மெயின் ரோடு, திருகாளிமேடு, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - இ. பன்னீர்செல்வம், 41/12, எண்ணெய்கார தெரு, காஞ்சிபுரம். ஜி. குமரன், அம்மன் கரை, காஞ்சிபுரம். ஜி.எல். கோவிந்தராஜ், அண்ணாதெரு, காஞ்சிபுரம். ஆர்.கே. செந்தில், 158, செங்கழுநீரோடை வீதி, காஞ்சிபுரம். எஸ். நம்பி வஜ்ஜிரவேல், நெ.73, கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெரு, காஞ்சிபுரம்.

**கரூர் மாவட்டம்**

தலைவர் - இரா. வேலுச்சாமி, 96, காளிப்பனூர் மேற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாந்தோனிமலை அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639007.

துணைத் தலைவர் - எம். பாஸ்கரன், 25/12, பெரியபுதூர், மேல் ஓரத்தை அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639113.

அமைப்பாளர் - **கே. நல்லுசாமி,** 385, ராமாகவுண்டன்புதூர், ஆண்டாங்கோவில் கிழக்கு அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639005.

துணை அமைப்பாளர்கள் - ஒ.கே. சத்தியமூர்த்தி, 85, ஓலப்பாளையம், புன்னம்சத்திரம் அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639136. அ. திருமுருகன், 7-3சி, ஊத்துப்பட்டி, பாதிப்பட்டி அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் - 621313. வே. செல்வம், 1/107, கந்தசாரப்பட்டி, மூக்கணாங்குறிச்சி, மூக்கணாங்குறிச்சி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639118. வி. வேலுச்சாமி 25/179, சின்ன மூக்கணாங்குறிச்சி, மூக்கணாங்குறிச்சி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639118. பி. சிவாஜி, 1/95, வேலாயுதம்பாளையம், வெள்ளப்பட்டி அஞ்சல், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639119.

**சிவகாசி மாநகரம்**

தலைவர் - ரவிக்குமார், 379/1, வடக்கு ரத வீதி, திருத்தங்கல்.

துணைத் தலைவர் - அஜய்குமார், சி325, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல்.

அமைப்பாளர் - **செல்வராஜ்,** 815, ஜவஹர்லால் நேரு ரோடு, பராசக்தி காலனி, சிவகாசி.

துணை அமைப்பாளர்கள் - காளிராஜன், 591, பராசக்தி காலனி 2வது தெரு, சிவகாசி. ஸ்ரீதர், 130, பாண்டியன் நகர், 4வது தெரு, திருத்தங்கல். வீரபுத்திரன், 967/106/21, பி. கே.எஸ்.ஏ. ஆறுமுகம் ரோடு, சிவகாசி. செல்வக்குமார், 15, சுப்பு நாடார் சந்து, திருத்தங்கல். முத்துப்பாண்டி, 39, சிவகாசி-விருதுநகர் மெயின் ரோடு, திருத்தங்கல்.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - அரங்க பன்னீர்செல்வம் , 24, பள்ளிக்கூட வீதி, தேங்காய்த்திட்டு, புதுச்சேரி-4.

துணைத் தலைவர் - ஞா. நவீன் (எ) மணிகண்டன், 4,பராதிதாசன் வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி-605003.

அமைப்பாளர் - **த. முகிலன்,** 27, 3-வது குறுக்குத் தெரு, மோகன் நகர், புதுச்சேரி-605005.

துணை அமைப்பாளர்கள் - ச. அரிதாஸ், 33, ரெட்டியார் வீதி, இராமநாதபுரம், புதுச்சேரி-605502. ஜெ. பாலு, 36, திருக்குறளார் நகர், 2-வது குறுக்குத் தெரு, அரும்பார்த்தபுரம், புதுச்சேரி-605110. சா. சுரேஷ், 254, சுப்பையா நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி. த. கார்த்திக், 29, முல்லை தெரு, காமராஜர் நகர், கோரிமேடு, தன்ந்திரி நகர், புதுச்சேரி-605006. எ. பிரபு , 8, 3-வது குறுக்குத் தெரு, காந்தி நகர், புதுச்சேரி-605009. ரா. பாலசண்முகம், 4, 2-வது குறுக்குத் தெரு, திரு.வி.க. நகர், முதலியார்பேட்டை, புதுச்சேரி. ப. கணேசன், பிள்ளையார் கோவில் தெரு, திருபுவனைப் பாளையம், புதுச்சேரி-605107. மு. முத்தரசன், 4-பி, சங்கரதாஸ் தெரு, ராஜ்பவன், புதுச்சேரி-605001. பெ. வெங்கடேசன், 4, பெருமாள் கோவில் தெரு, கவுண்டம்பாளையம், புதுச்சேரி-9.

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - **பி. ராஜராஜசோழன்,** எண்.6, ராமசாமி நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - த. ராஜலெட்சுமி, 19 பி, சிவாஜி நகர், தஞ்சாவூர். வி. பலராமன், 42/1336, பாலோபா சந்து, மேலவீதி, தஞ்சாவூர்.

தி. ரெங்கசாமி, 17, 10ம் தெரு, அண்ணா நகர், விளார் சாலை, தஞ்சாவூர். த.பாலசுப்ரமணியன், 363, முல்லை தெரு, புதிய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர். எஸ்.எம். சடகோபன் ராமானுஜம், 23, கீழத்தெரு, பள்ளியக்கிருஹாரம், தஞ்சாவூர்.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜி.கே. இராஜா, 4/205, மேல்சோமர்பேட்டை கிருஷ்ணகிரி மாவட்டம். மா. சூரியபிரகாசம், இராமேநத்தம், தேவர்முக்குளம் அஞ்சல், காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. கே.பி. சண்முகம், 3/22, சவுளூர் கூட்ரோடு, காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. எஸ். பாலாஜி, 97/44, ஆர்.எஸ். லட்சுமிபுரம், கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி மாவட்டம். ஆர். குமரேசன், தொகரப்பள்ளி கிராமம், பர்கூர், கிருஷ்ணகிரி. பி. தீபன்ராஜ் 1/8, தளிஅள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பி. செந்தில்குமார், 1/71, வடக்குத் தெரு, காரனை மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்

**தருமபுரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - **கே. தீர்த்தராமன்,** 1/183, வெங்கட்டம்பட்டி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 26-10-2023

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

---

## தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - ரா.சந்திரகலா, 51, ஒத்தவாடைத் தெரு, உருளையன்பேட்டை, புதுச்சேரி - 11. துணை

தலைவர் - வெ.பிரியதர்ஷினி, 5,2-ம் தெரு, காவேரி வீதி, அனிதா நகர், முதலியார் பேட்டை, புதுச்சேரி 605004.

அமைப்பாளர் - **ந.காயத்ரி,** 42 நடுத்தெரு, புதுப்பேட்டை, வாஸ்பேட்டை, புதுச்சேரி 605008

துணை அமைப்பாளர்கள் - ரமா, 64, மாரியம்மன் கோவில் வீதி, ஜி.என். பாளையம், வில்லியனூர், புதுச்சேரி 605110. ர.புஷ்பலதா, 57, மாரியம்மன் கோவில் தெரு, மேரி உழவர்கரை, புதுச்சேரி 10. வீ.நல்குணா, 3, பாலத்துவீதி, முத்தமிழ் நகர், உருளையன்பேட்டை, புதுச்சேரி - 13. ஜெ. தேன்மொழி, 3, நடுத்தெரு, வெண்ணிலா நகர், புதுச்சேரி - 13. அ.காமாட்சி, 65, பாரதிதாசன் வீதி, ஆர்.கே.நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி. ஏ.கல்யாணி, 21, கோட்ரஸ் தெரு, பெரியபேட், கரையாம்புத்தூர், புதுச்சேரி 605106. வலைதள பொறுப்பாளர்கள் - வீ.சூர்யா, 3, ஆற்றங்கரை வீதி, நோணாங்குப்பம், புதுச்சேரி. புஷ்பலதா, 79, 3-வது மெயின் ரோடு, செல்வா நகர், உறவையாறு, வில்லியனூர், புதுச்சேரி.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

வலைதள பொறுப்பாளர்கள் - மல்லிகா ராமகிருஷ்ணன், 18 வது வார்டு கவுன்சிலர், காஞ்சிபுரம். புவனேஸ்வரி, நாகலூத்து தெரு, காஞ்சிபுரம்.

**கோயம்புத்தூர் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வி.அனிதா தேவி, 82-13, சௌடாம்பிகை நகர், 7வது வீதி, சிவாஜிகாலனி, கோயம்புத்தூர் - 641030 வி.தேவகி, 42ஈ, யூனியன் பாங்க் ரோடு, 2வது வீதி, பெரியநாயக்கன்பாளையம், எஸ்.ஆர்.கே.வி போஸ்ட், கோயம்புத்தூர் 641020. எஸ்.எம்.சர்மிளா, 61, தனுஸ்ரீ கார்டன், சுண்டக்காமுத்தூர், கோயம்புத்தூர் 641010.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - ரேவதி அசோக், ஈ. டபிள்யு.எஸ்.96, டி.என். ஹெச்.பி காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி 627007.

துணை அமைப்பாளர்கள் - பூங்கனி ஆறுமுகம், 94 சி, சத்யா தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. எஸ். சொர்ணலதா, 33, ஸ்டேட் பேங்க் நியூ காலனி, ஜெபா கார்டன் அருகில், பெருமாள்புரம், திருநெல்வேலி.

**வேலூர் மாவட்டம்**

துணை அமைப்பாளர் - செ. உத்திரகுமாரி செல்வம் சிந்த கணவாய் பி.டி. மோட்டூர், கமலாவுரம் அஞ்சல், பேர்ணாம்பட்டு தாலுகா வேலூர்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 26-10-2023

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

## திமுக மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு திமுக மகளிர் தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - சத்தியா, 31,பிள்ளையார் கோவில் தெரு, கலிதீர்த்தாள்குப்பம், புதுச்சேரி.

துணை தலைவர் - ரா.விஜயலட்சுமி, 33, பாரதிதாசன் வீதி, கோவிந்தசாலை, புதுச்சேரி - 11.

அமைப்பாளர் - **ரா.சுமதி**, 82, செல்வவிநாயகர் நகர், கரிக்கலாம்பாக்கம், புதுச்சேரி

துணை அமைப்பாளர்கள் - ரா. சுமித்ரா, 62, நடுத்தெரு, பிள்ளையார் குப்பம், வில்லியனூர், புதுச்சேரி 605502. க. ஜெயபாரதி, 65, பிள்ளையார் கோவில் வீதி, கூனிச்சம்பட்டு, திருக்கனூர், புதுச்சேரி. கு.குப்பம்மாள், 12, அன்னை பிரிதயதர்ஷினி தெரு, ஜீவானந்தபுரம், இலாசுட்பேட்டை, புதுச்சேரி 605008. ஜோ.கஸ்தூரி, 20, பிடாரி அம்மன் கோவில் தெரு, குருவிநத்தம் பாகூர், புதுச்சேரி 607402 மு. அரசம்மாள், 63, காவல்காரன் கோவில் தெரு, கூனிச்சம்பட்டு, திருக்கனூர், புதுச்சேரி. சு.ராஜலட்சுமி, 51, விநாயகர் கோவில் தெரு, வி.மணவெளி, வில்லியனூர், புதுச்சேரி 605110. பா. சித்ரா, 3, பள்ளிக்கூடத் தெரு, கோவிந்தசாலை, புதுச்சேரி - 11. த.புவனேஸ்வரி, 54 சி, மாரியம்மன் கோவில் தெரு, பெரியப்பேட், வில்லியனூர், புதுச்சேரி 605110. செ. தைலம்மை, 33, அண்ணா நகர்,. ஒதியம்பட்டு, புதுச்சேரி 605110.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

வலைதள பொறுப்பாளர்கள் - பரமேஸ்வரி, விச்சந்தாங்கல், களக்காட்டூர், காஞ்சிபுரம். சூர்யா, புண்ய கோட்டீசுவன் தெரு, சின்ன காஞ்சிபுரம்.

**கோயம்புத்தூர் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஏ.மோகனசுந்தரி, 9, பொங்கியம்மாள் நகர் முதல் கவுண்டம்பாளையம் கோயம்புத்தூர் - 641030 ஆர்.ஆல்வின் மேரி, 44, ஞான இல்லம், ஐ.டி.ஐ பின்புறம், திருவள்ளுவர் நகர், ஜி.என்.மில்ஸ், கோயம்புத்தூர் 641029. வீ.நாகரத்தினம், 3/65, காளட்டியூர், சிக்கராம்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் 641004.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ஜோதிப்பிரியா, 4, ஒட்டகூத்தர் தெரு, பாட்டப்பத்து டவுன், திருநெல்வேலி. பி.மாரியம்மாள், 109/டி, வி.வி.கே. தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 26-10-2023

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

---

## மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சேர்ந்த வணிகர்களுக்கு

# சமாதானம் திட்டம் - 2023 விழிப்புணர்வு - திட்ட விளக்கக் கூட்டம்!

### வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது!

*சென்னை, அக். 29-*

*2023ஆம் ஆண்டு, தமிழ் நாடு வரிகள் (நிலுவைகள் தீர்வு செய்தல்) தொடர்பான சமாதான திட்டத்தின் சிறப்பியல்புகளை வணிகர்களுக்கு விளக்கும் வகையில்,*

*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை , திருமதி. பா.ஜோதி நிர்மலா சாமி, வணிகவரித்துறை ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளும், சமாதானம் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்க கூட்டம்:-*

*மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களை சார்ந்த வணிகர்களுக்கு 31.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10 மணி அளவில் மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கிலும், (Dwarka Palace, பாண்டி கோவில் அருகில்)*

*சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மத்தியம்), காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் மற்றும் கடலூர் கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு 06.11.2023 திங்கட்கிழமை அன்று முற்பகல் 10 மணி அளவில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கிலும் ,*

*கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஓசூர் கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு 07.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் கோயம்புத்தூரில் உள்ள ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கிலும் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் சமாதானத் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ள சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த வணிகர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வணிகவரித்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடுவூர் இரா.சாமிநாதன்

### அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**












தமிழ்மொழியைக் காப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 62 நாட்கள் தனிமைச் சிறையில் இருந்த பாளையங்கோட்டை அமைந்துள்ள நெல்லை மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடிகள் 1062 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழியை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். விழாவினைச் சிறப்புற ஒருங்கிணைத்த நெல்லை கிழக்கு – மத்திய மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்த இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

# கலைஞரும் நானும் 42

**"உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் 'பாதி அண்ணா' எனப் பாராட்டப்பட்டவர் என் தந்தையார் ஔவை நடராசன். அவர் மீது அளப்பரிய அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதுபோல், என் பாட்டனார் உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களுடனும் நல்ல தொடர்பில் இருந்தவர் முத்தமிழறிஞர் அவர்கள். இப்படி எனது பாட்டனார், தந்தையார் என தொடர்ந்து வந்த பிணைப்பு, என்னையும் குளிர்விக்கும் வகையில் அமைந்தது என்பது எனது பேறு என்பேன்".**

■ **ஔவை அருள், இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை**

## கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எனது நினைவுகளில் 1973-ஆம் ஆண்டிலிருந்து தேக்கி வைத்திருக்கிறேன். அப்போது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். சென்னை அண்ணா மேம்பாலம் திறப்பு விழாவில் எனது தந்தையாருடன் கலந்து கொண்டேன். அப்போது வானூர்தியில் இருந்து பூமழை தூவப்பட்ட காட்சியும், நடு வகிடு எடுத்த முத்தமிழறிஞரின் உருவமும் அழியாத கல்வெட்டாக நெஞ்சில் பதிந்துள்ளன. எனது இளவயது காலத்தில் இருந்தே, எந்தையாருடன் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாள், தைப் புத்தாண்டு, முத்தமிழறிஞர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாள் ஆகிய மூன்று நாட்களில் அவரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டு மகிழ்ச்சியுறுவோம்.

அவரைச் சந்தித்த வேளைகள் அனைத்திலும் **'வேறு தளை விரவாத வெண்பாவைப் போல'** தமிழ் - தமிழர் - தமிழுணர்வு தவிர வேறொன்றும் விவாதித்ததில்லை அந்த வித்தகர்!

### குடும்பத்துக்கே பெருமை அளித்தவர்

எங்கள் குடும்பத்துக்குப் பெருமை செய்த பெருந்தகையாளர் கலைஞர். 1974-ஆம் ஆண்டில், சென்னையில் என் தந்தையார் ஔவை நடராசன் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய கலைஞர், எந்தையாரின் உரை கேட்டு அவரை அடுத்தநாள் தலைமைச் செயலகம் வரவழைத்து தலைமைச் செயலகத்தின் செய்தித் துறையில் துணை இயக்குநர் பதவி வழங்கிச் சிறப்புச் செய்தார். அதன் பின்னர் ஆறு திங்கள் கழித்து மொழிபெயர்ப்புப் பிரிவில் இயக்குநர் பணி வழங்கி இதயம் குளிர்வித்த இனியவர் கலைஞர்.

எந்தையார் ஆற்றிய பணியினை அதே தலைமைச் செயலகத்தில் உள்ள மொழிபெயர்ப்புத் துறையில் இயக்குநர் பதவியினை 35 ஆண்டுகளுக்குப் பிறகு 2009-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ஆம் நாளன்று இந்த 'அருளுக்கு' வழங்கி அருளிச் செய்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான். அதை நினைவு கூரும்போது, நெல்லிக்காய் சுவைத்து நீர்குடித்த மாதிரி எப்பொழுதும் இதயம் இனிக்கிறது. இதுகாறும் யாரும் பெறாத அரிய பரிசில் என்று என் தாயார் மருத்துவர் தாரா நடராசன் சொல்லிச்சொல்லி மகிழ்வார்.

என் தந்தையாருக்கும், எனக்கும் மகிழ்ச்சியையும் அன்பையும் கொட்டிக் கொடுத்தவர் கலைஞர். தமிழுக்கு உழைப்பவர்களை அவர் கைவிட்டாரில்லை, உய்வித்தார் என்பதை உணர்வாளர்கள் அறிவர். என் தந்தையாருக்கு தமிழ்நாடு அரசின் பேரறிஞர் அண்ணா விருது, கலைமாமணி விருதுகளோடு வாய்ப்புக் கனியும் போதெல்லாம் வானுயரப் போற்றி வனப்புச் செய்தவர் வண்டமிழ்க் கலைஞர். தந்தைக்குக் கிடைத்த தனிப்பெருஞ் சிறப்பு அவர்தம் சிந்தையைத் தாங்கிய சிறியோர்க்கும் கிட்டியது, காலம் தந்த பரிசன்று - கலைஞர் தந்த பரிசு.



### சரியான நேரத்தில் சரியாக செய்கை

'சரியான செயல்களைச் செய்பவர் தலைவர். செயல்களைச் சரியாகச் செய்பவர் மேலாளர்' என்ற பீட்டர் டிரக்கர் (PETER DRUKER) என்ற மேனாட்டு அறிஞர் கூற்று. அதற்கு ஒப்ப, தலைவர்கள் ஏத்தும் தலைவரான கலைஞர் சரியான செயல்களைச் சரியான தருணத்தில் சரியாகச் செய்து சரியாத புகழ் பெற்றவர்.

**தலைமேல் வைத்துத் தமிழர்கள் கொண்டாடும் வள்ளுவரை, மலைமேல் வைத்துக் கொண்டாடிய அந்த மாமனிதர்!**

2006-ஆம் ஆண்டு என் பாட்டனார் உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்தபொழுது எந்தையாருடன் பெருங்குடும்பமாக நாங்கள் அனைவரும் சென்று நன்றி பாராட்டியதைக் கண்டு முத்தமிழறிஞர் கலைஞர் பெருமகிழ்வுற்றார். அப்போது உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க எந்தையாரிடம் அவர் உரையாடிய ஒவ்வொரு சொல்லையும் வைரப்பேழையில் வைத்தது மாதிரி எண்ணப்பேழையில் எழுதி வைத்திருக்கிறேன். **'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி'** என்ற சொல்லாடல் கலைஞருக்கே பொருத்தம் என்று பல நேரங்களில் முடிவு செய்து முகம் மலர்ந்திருக்கிறேன்.

### மேடைகளில் கண் பார்வை

தமிழ்நாடு ஆசிரியர் கல்லூரிகளின் சார்பாக 2007-ஆம் ஆண்டு நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞரை வரவேற்று, தொகுப்புரை வழங்கும் வாய்ப்புக் கிட்டியது. தண்ணமுத மதியாக, தமிழ் தந்த நிதியாக, தமிழரின் கதியாக அவரை உருவகித்து கவிதை பாடினேன். மேடையை விட்டுப் புறப்படும் பொழுது என்னைத் தனியாக அழைத்த அந்தத் தமிழ்வேந்தர், பழம்பிழிந்து வைத்தாற்போல் பாசத்தைப் பிழிந்து பாராட்டிச் சென்றார்.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஓர் அங்கமான தமிழ் இணைய மாநாட்டினை 2010-ஆம் ஆண்டில் தொகுப்புரைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதும் என்னைப் பார்த்து அகமகிழ்ந்து வாழ்த்திச் சென்றார்.

செம்மொழி மாநாட்டு மலரில் என் தந்தையாருடன், நானும் கட்டுரை எழுதி இருந்தேன். எனது மாமா பேராசிரியர் இரா.குமரவேலன், சித்தப்பா டாக்டர் மெய்கண்டன் ஆகியோரும் எழுதி இருந்தனர். அதைப் பார்த்த முத்தமிழறிஞர் "உரைவேந்தர் கட்டுரையையும் சேர்த்திருக்கலாம்ல" எனக் கேட்டார். அந்த நினைவுகள் இப்போதும் பசுமைபோர்த்தி நிற்கின்றன. முத்தமிழறிஞர் கலைஞரின் நூல் வெளியீட்டு விழாக்கள், கவியரங்கங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் எவையெனினும் எந்தையார் பங்கேற்பும் எளியேனின் இருப்பும் இல்லாமல் இருந்ததில்லை.

2010-ஆம் ஆண்டில், என் தந்தையார் எழுதிய 'அருளுக்கு ஔவை சொன்னது' என்ற நூல் வெளிவந்தது. அந்த நூலுக்கு வெளியீட்டு விழா எதுவும் நடைபெறவில்லை. ஆனால், பல இதழ்களில் நூலின் மதிப்புரைகள் வெளிவந்து கொண்டிருந்தன. 'துக்ளக்' இதழில் மதிப்புரை வந்த அடுத்த நாள் மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளராக இருந்த இராஜமாணிக்கம் அவர்கள், 'நூலை எடுத்துக் கொண்டு உடனே முதல்வர் அறைக்கு வா' என அழைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்த அந்த வசந்தத் தருணமும் வணக்கத்துக்குரிய வரலாற்றுத் தருணமாக அமைந்தது.

### ஆற்றுப்படுத்தல் என்கிற அன்பு

ஒருமுறை எனது தந்தையாரும், தாயும் நிகழ்ச்சிக்காக நெல்லை சென்றபோது, ரயிலில் குளிர்தாங்க முடியாமல் உடல்நலிவுற்று, மதுரையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனக்குத் தகவல் வந்து காலையில் மதுரை சென்று சேர்ந்த நேரத்தில், எனது அலைபேசிக்கு முதல் அழைப்பாக முத்தமிழறிஞரிடமிருந்து அழைப்பு வருகிறது. "ஔவை எப்படி இருக்கிறார்?" என அன்பொழுகக் கேட்ட அந்தக் குரல் இப்போதும் என் காதுகளில் ஒலிக்கிறது.

அதே பற்றினை கலைஞர் மீது என் தந்தையார் கொண்டிருந்தார். கலைஞரின் இறுதி நாட்களிலும், அவரால் பேச முடியவில்லை என்றபோதும் என் தந்தையார் மிகுந்த துயருற்றார். கலைஞர் மறைவுற்றார் எனக்கேட்டு கண்ணீர்விட்டு நிம்மதியிழந்த நாட்களில் அவரைத் தேற்றுவதே பெரும்பாடானது.

தலைமேல் வைத்துத் தமிழர்கள் கொண்டாடும் வள்ளுவரை, மலைமேல் வைத்துக் கொண்டாடிய அந்த மாமனிதர் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கிற குறள்நெறியே வாழ்ந்தார். அவரிடம் அளவளாவும் நிமிடங்கள் அத்தனையும் பூவுக்கு நிகராக மணக்கும். பொன்னுக்கு நிகராகக் கனக்கும்! அவரது கடைக்கண் பார்வை பரப்பளவில் பதியும் பேறு பெற்றவன் என்னும் பெருமிதமே எனக்கு வாழ்நாளெல்லாம் அகமகிழ்வு அளிக்கும்.

...பகிர்வார்கள்

---

## அதனால்தான் அவர் பெரியார்!

'கடவுள்களை வழிபடுவோரும் பெரியாரை விரும்புவது ஏன்?' என்பது புரியாமல் பா.ஜ.க.காரர்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டு அலைகிறார்கள்.என் குடும்பத்தில் அனைவருமே கடவுள் நம்பிக்கை உடையோரே. ஆனால், யாரும் பெரியாருக்கு எதிராக இதுவரை பேசியதில்லை. என் தாத்தா, அப்பா வாங்கிய புத்தகங்களில் கோவில்கள் பற்றிய தல வரலாற்று நூல்களும் உண்டு, பெரியார் பற்றிய புத்தகங்களும் உண்டு. பொதுவாக சராசரி தமிழ்மக்களின் நிலை இதுதான். மதுரையில் கள்ளழகரை ஆற்றில் இறக்கி நீராடச் செய்து விட்டு நேரே வாக்குச்சாவடிக்குப் போய் ஒரு திராவிட கட்சிக்கு வாக்களித்துச் செல்வதை அவர்களால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஏனெனில் தமிழனுக்கு, இந்த தொண்டுக் கிழவன் மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு தொண்ணூறு வயதுகளில் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தது நமக்காகத்தான் என உறைத்திருக்கிறது. பெரியாரை மதவாதிகள் எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபடும்போது 'நம் ஆளை எவனோ ஒருவன் வந்து களங்கப்படுத்தப் பார்க்கிறான்' என்கிற உணர்வு அவர்களுக்குள் எழுகிறது. காரணம் இதுதான்.. தமிழ்நாட்டில் மதம் வேறு, ஆன்மிகம் வேறு, சமூகம், அரசியல் என்பவை வேறு. இந்தத் தெளிவை பெரியார் சரியாக உருவாக்கியிருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் தாங்கள் அறியாமலேயே தம்முள் பதிந்து கிடக்கும் பெரியாரின் கருத்துகளால் வழிநடத்தப்படுகிறார்கள்.

அவர் மனித விடுதலையைப் பேசினார்; பெண் விடுதலையைப் பேசினார்; தீண்டாமையைச் சாடினார்; மூட நம்பிக்கைகளைச் சாடினார்;

ஒட்டுமொத்தமாக அவர் சமுக நீதிக்காகப் பாடுபட்டார். கடவுள் மறுப்பு என்பது அதில் ஒரு சிறு பகுதி மட்டுமே. இதனால்தான் இது பெரியார் மண்!

**-ஜெயராமன் என்பவரின் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்



### 'தொழிலாளர்' அண்ணா!



அருண்குமார்

திருச்சி 'பெல்' நிறுவனத்தில் பணிபுரிந்த என் தந்தை ஆசைத்தம்பி அவர்கள் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் 25 ஆண்டுகளாகப் பல்வேறு பொறுப்புகளை வகித்து 2002-ஆம் ஆண்டு தலைவர் பொறுப்பை எட்டியிருந்தார். கழகத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக அங்கு அண்ணா சிலை நிறுவ தொ.மு.ச சார்பாகத் திட்டமிட்டு, 2002 மார்ச் 11 அன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து பேரறிஞர் அண்ணா சிலையைத் திறந்து வைத்தார். மேலும் இதே கூட்டத்தில் என் தந்தை அவர்களின் 25 ஆண்டு கால பணியைப் பாராட்டி சால்வை அணிவித்து வாழ்த்தினார்.

**-ஆ.அருண்குமார், உறையூர், திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வேதனையுடன் கண்டனம்

**1992-ஆம் ஆண்டு தடா சட்டத்தை எதிர்த்து தலைவர் கலைஞர், பேராசிரியர், நாஞ்சில் மனோகரன், பொருளாளர் சாதிக் ஆகியோர் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தி, தமிழ்நாடு ஆளுநரிடம் மனு அளித்தனர். உ.பி.யில் பாபர் மசூதி இடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டத்தில் கலைஞர் மிக்க வேதனையுடன் கண்டனம் தெரிவித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 284




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், ராமநாதபுரம்.
தேசியமும் தெய்வீகமும்
எனது இரு கண்கள்
என்ற தேவர் பெருமகனாரின் நினைவைப் போற்றும்
திராவிடமும் தமிழ்மொழியும்
தனது இரு கண்களாக போற்றும்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களின் தலைமையில் ஜெயந்தி விழாவை
போற்றி வணங்குவோம்... வாரீர்!
ARASU ARTS
அன்புடன்
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் Bsc., BL.
பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழு தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
செ.முருகேசன் M.L.A.,
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்.


நன்றி! நன்றி! நன்றி!
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 20% BONUS
1-7-2023 முதல் 4% அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய
தொழிலாளர்களின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர்
போக்குவரத்துத் துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
திரு கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!
LPF
மா.சுதாகரன் தலைவர் கா.ரவி பொதுச்செயலாளர் ஆ.முரளி பொருளாளர்
மற்றும் அனைத்து மத்திய சங்க நிர்வாகிகள் - பணிமனை நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.
காஞ்சிபுரம் மண்டலம் – பதிவு எண் : 2148/MDS, LPF:700


நன்றி!
நன்றி!
நன்றி!
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 20% BONUS
1-7-2023 முதல் 4% அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய
தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர்
போக்குவரத்துத் துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
திரு கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!
LPF
மு.வைத்திநாதன் தலைவர்
ப.பன்னீர்செல்வம் பொதுச்செயலாளர்
மு.கருணாநிதி பொருளாளர்
சி.பி.இளங்கோ துணைப் பொதுச்செயலாளர்
மற்றும் அனைத்து மத்திய சங்க நிர்வாகிகள் - பணிமனை நிர்வாகிகள்
அரசு விரைவு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. பதிவு எண் : 3445/MDS, LPF:1027


நன்றி! நன்றி! நன்றி!
நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர்களுக்கு
20% BONUS
தற்காலிக ஊழியர்களுக்கு
ரூ.3000/-
கருணைத் தொகையும் வழங்கிட உத்தரவிட்ட
தொழிலாளர்களின் ஒப்பற்ற பாதுகாவலர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
கோரிக்கைக்கு துணைநின்ற
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவுத்துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!
தொழிலாளர்களின் நலம்! தமிழ்நாட்டின் பலம்!
LPF
தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன்
பதிவு எண். 325 / சிபிடி பேரவை இணைப்பு எண் : 325 தொ.மு.ச. தலைமைச் சங்கம், சென்னை – 600 010.


கலைஞர்
100
1924 - 2023
மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு 20 % போனஸ்
01.07.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு
வழங்கிய தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்
தொழிலாளர்கள் சார்பில் நெஞ்சார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
மு.சண்முகம் M.P
பேரவை பொது செயலாளர்
கி.நடராசன்
பேரவை பொருளாளர்
LPF
தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை
கலைஞரகம்
எண் : 25, தியாகராயா தெரு, வடக்கு உஸ்மான் சாலை,
தி.நகர், சென்னை – 17.
9444129952



அக்டோபர்-30ல்
பசும்பொன் தேவர் ஜெயந்தி விழா
வணங்குதலுக்குரிய
தலைவருக்கு
மக்களின் மனம் கவர்ந்த
தலைவரின்
மரியாதை!
பெருநாழி வி.போஸ் B.Com., திமுக மாநில இலக்கிய அணி




29-10-2023 இன்று
தி.மு.க. மாணவர் அணி சார்பில்
மாவட்ட அமைப்பாளர் -
துணை அமைப்பாளர்களுக்கான
கருத்தியல் பயிலரங்கம்
நிறைவு விழாவிற்கு வருகை தரும்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு. எ.வ.வேலு
பொதுப்பணி (ம) நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், அவர்களை
வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கும்...
க.தேவராஜி MLA.,
திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர்
சி.வி.எம்.பி.எழிலரசன் B.E., B.L., MLA.,
செயலாளர்
இரா.ராஜீவ்காந்தி தலைவர்
சி.ஜெரால்டு இணைச் செயலாளர்
எஸ்.மோகன் இணைச் செயலாளர்
துணைச் செயலாளர்கள்
மன்னை த.சோழராஜன்
சேலம் ரா.தமிழரசன்
அதலை பி.செந்தில்குமார்
தமிழ் கா.அமுதரசன்
பி.எம்.ஆனந்த்
கா.பொன்ராஜ்
வி.ஜி.கோகுல்
பூரணசங்கீதா சின்னமுத்து
ஜெ.வீரமணி
அன்புடன் தே.பிரபாகரன் B.E., MBA.,
மாணவரணி அமைப்பாளர் ■ திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக தரை தளத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) வருவாய்த்துறை சார்பில் புதிதாக அமைக் கப்பட்டுள்ள நூலகத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால் வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர். கா.ப.கார்த் திகேயன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.



சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் நாகனிரவி – திருமதி ஆர்.ஜோதி போஸ் தேன்மொழி ஆகியோரின் மகள் பிரியதர்ஷணிக்கும் – செல்லமுத்து – திருமதி ஜெயா ஆகியோரின் மகன் கற்பூரசுந்தர பாண்டியனுக்கும் – அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், திருமதி பிரேமா பெரியகருப்பன் ஆகியோர் திருமணம் நடத்தி வைத்தார்கள். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ., ராமசாமி உட்பட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகள் பாடநூல்களில் இருட்டடிப்பு எனும்

# ஆளுநரின் பேச்சு ஆதாரமற்றது - அடிப்படையற்றது!

## தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கண்டனம்!



சென்னை, அக். 29-

திராவிட இயக்கங்களின் ஆட்சியில் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகள் பாடநூல்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன என ஆளுநர் பேசியது ஆதார மற்றது அடிப்படையற்றது! என தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கண்டனம் தெரிவித்துள்ளார்!

அவர் நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறியதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு அரசின் பாடநூல்களில் விடுதலைப் போராட்ட தியாகிகள் குறித்த வரலாறு பாடநூல்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்ற ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்தியிருப்பது கண்டனத்திற்குரியது. ஆளுநர் அவர்கள் அவ்வாறு கூறும் போது குறைந்து பட்சம் தமிழ்நாடு பாட நூல்களை படித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் பாடநூல்களை தினமும் மாணவர்களுக்கு போதித்து வரும் ஆசிரியர்களிடம் கேட்டிருக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல் ஏனோதானோ என்று உயர் பொறுப்பில் இருக்கும் ஆளுநர் பேசியிருப்பது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல.

தமிழ்நாடு அரசின் பாடநூல்களைப் பொறுத்த வரை 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் பாடங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த விடுதலை போராட்ட வீரர்கள் பற்றிய பாடங்கள், அவர்களின் வரலாறு, தியாகங்கள், அவர்கள் இந்திய விடுதலைக்காக ஆற்றிய பங்கு ஆகியவை படங்களுடன் தெளிவாக மாணவர்களுக்கு புரிந்து கொள்ளும்படி விளக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக ஆறாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் தேசத்தந்தை மகாத்மா காந்தி, கர்ம வீரர், முண்டாசு கவிஞர் பாரதியார், வீரமிகு வேலு நாச்சியார் ஆகியோரின் தியாக வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. ஏழாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார், பசும்பொன் தேவர் திருமகனார் உ.முத்து ராமலிங்கனார், கன்னியத்திற்குரிய காயிதே மில்லத் ஆகியோரின் விடுதலைப் போராட்ட தியாகங்க ளும், எட்டாம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் அரசியல் சட்ட மேதை அண்ணல் டாக்டர் அம்பேகர் பங்களிப்பும், ஒன்பதாம் வகுப்புதமிழ் பாடப்புத்தகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், தந்தை பெரியார், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் ஆகியோரின் வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன.

பத்தாம் வகுப்பு பாடநூலில் திலகர், கோகலே, வ.வே.சு, பிபின் சந்திர பால், மோதிலால் நேரு, விபின் சந்திரர்,பகத்சிங், ராஜகுரு, சுகதே வினோபா பாவே, பட்டாபி சீதாராமையா, அருணா ஆசப் அலி, சத்தியமூர்த்தி, மூதறிஞர் ராஜாஜி, தமிழறிஞர் திரு.வி.க, என எண்ணற்ற தியாக வரலாறுகள் இடம் பெற்றுள்ன.

ஆனால் இந்த வரலாறு எல்லாம் படித்து பார்க்காமல் படித்துப் பார்க்கவும் ஆர்வம் காட்டாமல் விடுதலைப் போராட்ட வீரர்களை சிறப்பித்து வரும் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான திராவிட மாடல் அரசை குறை காண வேண்டும் என்ற குதர்க்க எண்ணத்தோடு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருப்பது உரை அல்ல. அந்தப் பதவிக்கு பொருத்தமில்லாத ஆதாரமற்ற அரசியல் பேச்சு!

இன்னும் சொல்லப் போனால்பத்தாம் வகுப்பு வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் ருக்மிணி லட்சுமி பதி, பூலித்தேவர்,ஒண்டிவீரன்,

குயிலி, வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை உள்ளிட்ட பல விடுதலைப் போராட்ட தியாகிகள் பங்களிப்பும், 11ம் வகுப்பு வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் திப்பு சுல்தான், ஜான்சி ராணி லட்சுமி பாய் ஆகிய விடுதலை வீரர்கள் பங்களிப்பும் இடம்பெற்றுள்ளதை மாணவர்கள் அறிவார்கள். அவர்களுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்கள் அறிவார்கள். 12 ஆம் வகுப்பில் வாஞ்சிநாதன்,

சுப்பிரமணிய சிவா, மவுலானா அபுல் கலாம் ஆசாத், அலி சகோதரர்கள், ஜவஹர்லால் நேரு, ஆசாத், பகத் சிங், உள்ளிட்ட பலரின் விடுதலைப் போராட்ட வரலாறுகள் மிக அழகாக எடுத்துரைக் கப்பட்டுள்ளன. எனவே ஆளுநர் வெற்று மைதானத்தில் “கம்பு சுற்றுவதை” தவிர்க்க வேண்டும்.

சமூக நீதியைக் காக்கும் திராவிடம் ஒரு பழுத்த மரம். அதை மாண்புமிகு ஆளுநர் “பொய்” கல்லெறிந்து வீழ்த்தி விட முடியாது. திராவிடமும், சமூக நீதியும் வலுப்பெறும், உறுதியாகும், நிலைத்து நிற்கும். விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறு பாடநூல்களில் இருந்து நீக்கப்பட்டு விட்டது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அடிப்படை இல்லாத மேடை பேச்சுக்கள் ஆளுநரின் பதவிக்குரிய கண்ணியத்தை மேலும் அடியோடு குறைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

### கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் பா.ஜ.க. ரூ.50 கோடி பேரம்!

# காங்கிரஸ் எம்.எல்.ஏ. பரபரப்பு குற்றச்சாட்டு!

## வீடியோ ஆதாரம் இருப்பதாக பேட்டி!

பெங்களூரு, அக்.29-

கர்நாடக மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் அணி தாவ பா.ஜ.க. 50 கோடி ரூபாய் பேரம் பேசுவதாக காங்கிரஸ் எம். எல்.ஏ. பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளார்.

மண்டியா தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. வான ரவிகுமார் கணிகா, தாவணகெரேவில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், கர்நாடகா வில் கடந்த 2019ம் ஆண்டு ம.ஜ.த.காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை பணம் மற்றும் பதவி ஆசை காட்டி கவிழ்த்த கும்பல், தற்போது மீண்டும் காங்கிரஸ் கட்சியில் உள்ள சில எம்.எல்.ஏ.க்களை விலை கொடுத்து வாங்குவதற்கான முயற்சி மேற்கொண்டு வருவதாக விமர்சித்தார்.

காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசும் கும்பலில் பா.ஜ.க. மூத்த தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடியூரப்பாவுக்கு உதவியாளராக இருந்த ஒருவரும், மைசூரு மற்றும் பெலகாவி பகுதியைச் சேர்ந்த தலா இருவரும் உள்ளதாக கூறிய ரவிகுமார் கணிகா, அணி தாவ 50 கோடி ரூபாய் தருவதாகவும், அமைச்சரவையில் வாய்ப்பு கொடுப்பதாகவும் பேரம் பேசுவதாக தெரிவித்தார்.

காங்கிரஸ் எம்எல்ஏக்களிடம் அந்த கும்பல் பேரம் பேசுவது தொடர்பான வீடியோ ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும், அதை தக்க சமயத்தில் வெளியிடுவேன் என்றும் ரவிகுமார் கணிகா குறிப்பிட்டார்.

### மதுரை மாநகர் மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் - நீக்கல் சிறப்பு முகாம்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மதுரை, அக். 29-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

1.1.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர,04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் மையங்களில் சிறப்பு முகாம்கள் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி வாக்காளர் பட்டியலில் 18 வயது நிறைந்த வர்களின் பெயர்களையும் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

2. பெயர்களைச் சேர்க்க/ நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் - 04, 05.11.2023, 18, 19. 11.2023

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 01.01.2024

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) மற்றும் கழக உடன்பிறப்புகள் துரிதமாக செயல்பட்டு வாக்காளர்கள் சேர்த்தல் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு : பகுதி, வட்ட செயலாளர்கள் அவரவருக்கான பகுதி, வட்டங்களில் அவசியம் மேற்பார்வை செய்து மாவட்டக் கழகத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரப் போராட்ட வீரர்களை பெருமைப்படுத்தியவர் கலைஞர்!

## முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் பேட்டி!

சிவகங்கை, அக். 29-

சிவகங்கையை ஆட்சி புரிந்த மாமன்னர்கள் மருது பாண்டியர்களின் 222 ஆவது நினைவு நாள் காளையார் கோவிலில் அனுசரிக்கப் பட்டது. இதில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி விட்டு முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

சிவகங்கையில் ஆட்சி புரிந்த மாமன்னர்மருது சகோதர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர்கள். முதல் முதலில் இந்தியாவிலேயே ஆங்கிலேயர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திய மக்கள் புரட்சிக்கு வித்திட்ட மாமன்னர்கள். 16. 6.1801ம். ஆண்டில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக யுத்த பிரகடனம் ஜம்பு தீவு பிரகடனம் ஆற்காடுமற்றும் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயில் முன்பாக நேரடியாக வெளிப்படுத்தியவீரர்கள். நேரடியாக போர்க்களத்தில்போராடிய தமிழர் களின் வரலாறு ஒருசில நிர்ப்பந்தத்தால் மறைக்கப் பட்டது.

ஆனால் அந்த வரலாற்றை தெரிந்து கொண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மருது பாண்டியர்களுக்கு பெருமைச் சேர்த்திடும் வகையில் மதுரை மாரியம்மன் தெப்பக் குளத்தில்மருது சகோதரர்களுக்கு சிலை வைத்து அதை திறந்து வைத்தார். அதே போல் சென்னையில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் அவர்கள்தலைநகரில் மாமன்னர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் காந்தி மைதானத்தில் மருதுபாண்டியர்களுக்கு சிலை வைத்து அதை திறந்து பெருமை சேர்த்தார். இவ்வாறு தலைவர் கலைஞர் முதல் முதல்வர் தளபதி வரை தி.மு.கவினரால் சுதந்திர போராட்ட வீரர்கள் பாராட்டு பெற்றார்கள்.

திருப்பத்தூரில் ஆங்கிலேயர்களால் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் மருது பாண்டியர்கள் ஆகியோர் தூக்கிலிடப்பட்டார்கள். பெரிய மருதுபாண்டியர் மகன் துரைச்சாமி மற்றும் 73 பேர் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து ஆங்கிலேயர்களால்பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். அங்கு பினாங்கில் அவர்கள் கட்டிய தேவாலயம் இன்றும் வரலாற்றுச் சின்னமாக அமைந்துள்ளது. அவர்களுக்கு தூத்துக்குடியில் நினைவுச் சின்னம் அமைக்குமாறு தமிழக முதல்வர் தளபதி அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதையும் அவர்கள் விரைவில் நிறைவேற்றி தருவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நம்பிக்கையும் உள்ளது. கழக ஆட்சியும் தலைவர் கலைஞரும் தளபதி அவர்களும்தான்நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு உயிர் நீத்த தியாகிகளை பெருமைப் படுத்தினார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொன் முத்து ராமலிங்கம் கூறினார்.





எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் , இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். கேலரி தடகள ஓடுதளம் உள்ளிட்ட வசதிகளைப் பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிக்க வேண்டுமென விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் மற்றும் விளையாட்டு அரங்க பணியாளர்களை வலியுறுத்தினார்.



கலைஞர் 100
1924 - 2023
தமிழ்நாடு அரசு போக்குவரத்து
கழக தொழிலாளர்களுக்கு
20% போனஸ்
அறிவித்த
மாண்புமிகு.
தமிழ்நாடு முதல்வர்
மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்
மாண்புமிகு. போக்குவரத்துத்துறை அமைச்சர்
சா.சி.சிவசங்கர் அவர்களுக்கும்
ஈரோடு மண்டல போக்குவரத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக
நன்றி! நன்றி !! நன்றி !!!
பேரவை பொதுச்செயலாளர்
மு.சண்முகம் MP
பேரவை பொருளாளர்
கி.நடராஜன்
K.K.பழனிச்சாமி
தலைவர்
V.பாலசுப்பிரமணியம்
பொதுச்செயலாளர்
R.ரங்கநாதன்
பொருளாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
ஈரோடு மண்டலம்




நன்றி ! நன்றி !! நன்றி !!!
கலைஞர் 100
1924 - 2023
போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு
20% சதவிகித போனஸ் வழங்கிட ஆணை பிறப்பித்த
போக்குவரத்து தொழிலாளர்களின் குடும்பத்தலைவர்
மாண்புமிகு. மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. சா.சி.சிவசங்கர், B.E.,MBA.,
போக்குவரத்துத்துறை அமைச்சர்
உயர்திரு. மு.சண்முகம், MP.,
தொ.மு.ச பேரவை பொதுச் செயலாளர்
உயர்திரு. கி.நடராசன்
தொ.மு.ச பேரவை பொருளாளர்
ஆகியோருக்கு எங்களது மண்டலத்தின் சார்பில்
நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
MK STUDIO Cell : 9500758141
தி.செங்குட்டுவன், Ex.MLA.,
சிறப்பு தலைவர்
ஆ.சின்னசாமி
தலைவர்
பா.கிருஷ்ணன்
பொது செயலாளர்
கு.சேகர்
பொருளாளர்
TNSTC தொ.மு.ச - தருமபுரி மண்டலம்




கலைஞர் 100
1924 - 2023
அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு 20% போனஸ்,
01.07.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு
வழங்கிய, தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம்
திராவிட நாயகன்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
சா.சி.சிவசங்கர் அவர்களுக்கும்
தொழிலாளர்கள் சார்பில் நெஞ்சார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
திரு. மு.சண்முகம் MP
பொதுச்செயலாளர் - தொ.மு.ச பேரவை
திரு. கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச பேரவை
கோ.மோகன்குமார்
தலைவர்
த.சரவணகுமார்
பொதுச்செயலாளர்
கி.சீனிவாசன்
பொருளாளர்
9444129952
LPF
மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம்
பதிவு எண் : 605/MDS பேரவை இணைப்பு எண் : 287


நாள் : 27, 28, 29.
அக்டோபர் 2023
இடம் : ஏ.ஜி.எஸ்
ஹாலிடே ரிசார்ட்,
ஏலகிரி மலை
29-10-2023 இன்று
தி.மு.க. மாணவர் அணி சார்பில்
மாவட்ட அமைப்பாளர் -
துணை அமைப்பாளர்களுக்கான
கருத்தியல் பயிலரங்கம்
நிறைவு விழாவிற்கு வருகை தரும்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு. எ.வ.வேலு
பொதுப்பணி (ம) நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், அவர்களை
வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கும்...
சி.வி.எம்.பி.எழிலரசன் B.E., B.L., MLA.,
செயலாளர்
இரா.ராஜீவ்காந்தி தலைவர்
சி.ஜெரால்டு இணைச் செயலாளர்
எஸ்.மோகன் இணைச் செயலாளர்
துணைச் செயலாளர்கள்
மன்னை த.சோழராஜன்
சேலம் ரா.தமிழரசன்
அதலை பி.செந்தில்குமார்
தமிழ் கா.அமுதரசன்
பி.எம்.ஆனந்த்
கா.பொன்ராஜ்
வி.ஜி.கோகுல்
பூரணசங்கீதா சின்னமுத்து
ஜெ.வீரமணி
தி.மு.க மாணவர் அணி
Vettri Arts © 98402 06731


வாழ்க தளபதி
வளர்க தொமுச
நன்றி! நன்றி!! நன்றி!!!
போக்குவரத்து தொழிலாளர்களுக்கு
20 சதவித போனஸ் அறிவித்த
தமிழக முதல்வர் மாண்புமிகு
தளபதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
அறிவிக்க காரணமாக இருந்த
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,
சா.சி.சிவசங்கர் B.E., M.B.A.,
அவர்களுக்கும்
கோரிக்கை வைத்து பெற்று தந்த பேரவை பொதுச் செயலாளர்
மரியாதைக்குரிய
மு.சண்முகம் MP
அவர்களுக்கும்
பேரவை பொருளாளர்
மதிப்புமிகு
கி.நடராசன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
P.பழனிவேல் தலைவர்
தங்க.ஆனந்தன் பொதுச் செயலாளர்
பால.செந்தில்நாதன் பொருளாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
பதிவு எண்.218/CDR பேரவை இணைப்பு எண்.1002/2009
கடலூர் - மண்டலம்.
A.K.S. Digital Printing 9626282025 Chidambaram


கடுமையான நிதிநெருக்கடியிலும் அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கு
20 சதவீதம் போனஸை தாயுள்ளத்துடன் வழங்கிய
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
மு.சண்முகம் MP
பேரவை பொதுச் செயலாளர்
கி.நடராஜன்
பேரவை பொருளாளர்
ப.சென்னியப்பன்
மண்டல தலைவர்
ஜீவா.கே.கே.துரைசாமி
மண்டல பொதுச்செயலாளர்
ஜி.மணி
மண்டல இணை பொதுச்செயலாளர்
சு.சின்னக்கண்ணன்
மண்டல பொருளாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
அனைத்து தொழிலாளர்கள் - திருப்பூர் மண்டலம்



வாழ்க தளபதி
வளர்க தொ.மு.ச
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு
20% சதவிகித போனஸ் 01-07-2023 முதல் 4 சதவிகித
அகவிலைப்படி உயர்வு வழங்கிய போக்குவரத்துக்
கழகத் தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு
தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும்
தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு
சா.சி.சிவசங்கர் BE.,MBA அவர்களுக்கும்
போக்குவரத்து துறை அமைச்சர்
மரியாதைக்குரிய
மு.சண்முகம் MP அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொது செயலாளர்
உயர்திரு
கி.நடராசன் அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொருளாளர்
நன்றி! நன்றி!! நன்றி!!!
சே.மணி தலைவர்
தா.இரமேஷ் பொதுச்செயலாளர்
மு.கிருஷ்ணன் பொருளாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (வேலூர்)
தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
பதிவுஎண் 820/ : NAT, பேரவை இணைப்பு எண் : 405.வேலூர் மண்டலம்




அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கடுமையான
நிதிநெருக்கடியிலும் 20% தீபஒளி போனஸ் வழங்கிய
திராவிட நாயகர், மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
S.S.சிவசங்கர் அவர்களுக்கும்
தொ.மு.ச.பேரவை பொதுச்செயலாளர்
M.சண்முகம் M.P அவர்களுக்கும்
சேலம் தொ.மு.ச. சிறப்புத்தலைவர்
இரா.இராஜேந்திரன் B.A.B.L.,M.L.A., அவர்களுக்கும்
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.
தொ.மு.ச. பேரவை பொருளாளர்
கி.நடராஜன் அவர்களுக்கும்
சேலம் மண்டல போக்குவரத்து தொழிலாளர்கள் சார்பில் மனமார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
அரசு போக்குவரத்து தொ.மு.ச. சேலம் மண்டலம்.




வாழ்க கலைஞர்!
வளர்க தொ.மு.ச!!
பேரவை இணைப்பு எண் - 824
பதிவு எண் 237/ VNR
நன்றி..! நன்றி..! நன்றி..!
போக்குவரத்து கழகத்தின் பொற்கால ஆட்சி
போக்குவரத்து கழகத்தில் பணியாற்றும் தொழிலாளருக்கு 20% போனஸ் வழங்கிய
மாண்புமிகு. தமிழக முதல்வர்
மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்
மாண்புமிகு
K.K.S.S.R.இராமச்சந்திரன்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர்
அவர்களுக்கும்
மாண்புமிகு
தங்கம் தென்னரசு
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளர்
அவர்களுக்கும்
மாண்புமிகு
எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களுக்கும்
போக்குவரத்து துறை அமைச்சர்
உயர்திரு தொழிலாளர்களின் பாதுகாவலர்
மு.சண்முகம் எம்.பி அவர்களுக்கும்
பேரவை பொதுச்செயலாளர்
உயர்திரு
கி.நடராஜன் அவர்களுக்கும்
பேரவை பொருளாளர்
விருதுநகர் மண்டல தொ.மு.ச
நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
விருதுநகர் மண்டலம்
VNR




போக்குவரத்து கழக
தொழிலாளர்களுக்கு
20 சதவீதம் போனஸ்
ரூ.16800.
வழங்கிட உத்திரவிட்ட
உழைக்கும் மக்களின்
உத்தம தலைவர்
பாடுபடும் பாட்டாளியின்
பாதுகாவலர்
திராவிட மாடல் ஆட்சியின் நாயகர்
மாண்புமிகு. முதல்வர் அவர்களுக்கும்
மாண்புமிகு. போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்களுக்கும்
தொ மு ச பேரவை பொதுச் செயலாளர்
திரு. மு.சண்முகம் MP அவர்களுக்கும்
பேரவை பொருளாளர் கி.நடராசன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கம் - 79/TAJ
கும்பகோணம், நாகை மண்டலம்